பக்கங்கள்:-24

# காலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவர் ஆண்டு 2057 | மார்கழி 25 | ஞாயிற்றுக்கிழமை | 11.01.2026 | அதிர்வு 164

## ‘கொண்ட ரஞ்சி’ டுபாயில் கைது!



பாதாள உலகக் குழு உறுப்பினரான “கொண்ட ரஞ்சி“ என்று அழைக்கப்படும் ரஞ் சித்குமார் 06

# பிரதமருக்கு எதிரான எதிர்க்கட்சியின் அவதூறு பரப்புரையை ஏற்க முடியாது!

### முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் எம்.பி. கடும் கண்டனம்

கல்வி அமைச்சரான பிரதமர் ஹறிணி அமரசூரியவுக்கு எதிராக எதிர்க்கட்சியால் தற்போது கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் முற்றிலும் ஏற்றுக்கொள்ளவே முடியாத அவதூறு பிரசாரங்களை நாம் ஏற்றுக் கொள்ளவில்லை என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி. தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி. தனது முகநூல் பக்கத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

“பிரதமர் என்கின்ற ரீதியிலும் அவரது கட்சியின் ஒரு முக்கியஸ்தர் 06



# ஹறிணி மீதான பிரேரணை: தமிழரசுக் கட்சி ஆதரிக்காது!

### சிறீதரன் எம்.பி. தெரிவிப்பு

**கல்வி அமைச்சரான பிரதமர் ஹறிணி அமரசூரியவுக்கு எதிராக பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்றத்தில் கொண்டுவரத் தீர்மானித்துள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையை, இலங்கைத் தமிழரசுக் கட்சி ஆதரிக்காது என அக்கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் சிவஞானம் சிறீதரன் எம்.பி. தெரிவித்தார்.** 06



# கல்வி அமைச்சருக்கு எதிரான பிரேரணைக்கு ஆளும் கட்சியினரும் ஆதரவு வழங்க வேண்டும்



### இப்படி மொட்டுக் கட்சியினர் வலியுறுத்து

“கல்வி அமைச்சரான பிரதமர் ஹறிணி அமரசூரியவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்பட்டுள்ளமை பொருத்தமான அரசியல் நடவடிக்கையாகும். இந்தப் பிரேரணைக்கு ஆளும் கட்சியினரும் ஆதரவு வழங்க வேண்டும்.”

– இவ்வாறு இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

பிரதமருக்கு எதிரான 06




அரசமைப்புக் கவுன்ஸில் உறுப்பினர் பதவியில் இருந்து விலகுமாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரனுக்கு கட்சியின் அரசியல் குழு பணிப்புரை வழங்கியமையை அடுத்து கட்சியின் அரசியல் குழு விவகாரத்தையும் சர்ச்சையாக்கும் நகர்வு ஆரம்பித்திருக்கின்றது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாப்புப்படி அவசர அரசியல் விடயங்களைக் கையாளுவதற்காக அரசியல் குழு ஒன்று செயல்பட வேண்டும். ஆயினும் தீர்மானம் இறுதி செய்யும் அதிகாரம் மத்திய குழுவுக்குத்தான் உண்டு. அரசியல் குழுவின் முடிவுகள் அவ்வப்போது மத்திய குழு கூடும் போது அங்கீகரிக்கப்பட வேண்டும்.

ஆயினும் மத்திய குழு போன்று அரசியல் குழுவும் உரிய முறைப்படி தெரிவு செய்யப்பட்டதாக இருக்க வேண்டும்.

இப்போதைய நாடாளுமன்ற உறுப்பினர்களின் நால்வரே அரசியல் குழுவில் இருக்கின்றனர். மிகுதி நால்வர் அரசியல் குழுவில் இல்லை. 06

# ஊவா மாகாணத்திலும் விரைவில் வங்கி அட்டைகளில் பஸ் கட்டணம்



அரசாங்கத்தின் டிஜிட்டல் மயமாக்கல் திட்டத்தின் கீழ், ஊவா மாகாணத்திற்கும் வங்கி அட்டைகள் மூலம் பஸ் கட்டணங்களை செலுத்தும் முறை அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது.

ஊவாமாகாணவீதிபயணிகள்போக்குவரத்து அதிகாரசபையுடன் தொடர்புடைய அனைத்து பஸ் உரிமையாளர்கள் மற்றும் வங்கி பிரதிநிதிகளுக்கான விழிப்புணர்வை ஏற்படுத்த டிஜிட்டல் பொருளாதார அமைச்சகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சியின் போது இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில், வங்கி அட்டைகள் மூலம் டிஜிட்டல் பணம் செலுத்துவதன் வசதி மற்றும் அதனால் ஏற்படும் நன்மைகள் குறித்து அனைத்து பஸ் உரிமையாளர்களுக்கும் தெரிவிக்கப்பட்டது.

ஊவா மாகாண பயணிகள் போக்குவரத்து அதிகாரசபைக்குள் உள்ள அனைத்து பஸ்களுக்கும் வங்கி அட்டைகள் மூலம் பணம் செலுத்தும் டிஜிட்டல் வசதியை சில மாதங்களுக்குள் வழங்க பஸ் உரிமையாளர்கள் ஒப்புக்கொண்டனர் என கூறப்படுகிறது.

# புலம்பெயர் தொழிலாளர்கள் மூலம் 2025 இல் அதிகபடியான வருமானம்



இலங்கையின் வெளிநாட்டு வேலை வாய்ப்பு வரலாற்றில் இதுவரை இல்லாத அளவாக, 2025 ஆம் ஆண்டில் புலம் பெயர்ந்த தொழிலாளர்கள் மூலம் அதிக படியான வருமானம் கிடைத்துள்ளதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் அறிவித்துள்ளது.

கடந்த 2025ஆம் ஆண்டு ஜனவரி முதல் டிசம்பர் வரையிலான காலப்பகுதியில் 8.07 பில்லியன் அமெரிக்க டொலர் (2432 பில்லியன் ரூபா) வருமானமாகக் கிடைத்துள்ளது.

இது 2024 ஆம் ஆண்டுடன் (6.575 பில்லியன் டொலர்) ஒப்பிடுகையில் 22.8 வீத அதிகரிப்பாகும்.

2025 டிசம்பர் மாதத்தில் மாத்திரம் 879.1 மில்லியன் அமெரிக்க டொலர் நாட்டுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

இதுவே ஒரு மாதத்தில் பெறப்பட்ட அதிகப்படியான தொகையாகும்.

இந்தநிலையில், அரசாங்கத்தின் முறையான கொள்கைகள் மற்றும் தரமான திறன்மிக்க தொழிலாளர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பியமையே இந்த வெற்றிக்குக் காரணம் என இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் சுட்டிக்காட்டியுள்ளது.

கடந்த ஆண்டில் மாத்திரம் 310,000 இற்கும் மேற்பட்ட இலங்கையர்கள் வேலைவாய்ப்புக்காக வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளனர்.

அந்நிய செலாவணி கையிருப்பைப் பலப்படுத்துவதற்கும் நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கும் இந்த வருமானம் பெரும் உந்து சக்தியாக அமைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.




உ

திரு. குருசுவாமி சுரேந்திரன்
& திருமதி அருணா சுரேந்திரன்
தம்பதியினரின் புதல்வியும்

'நடன திலகம்' ஸ்ரீமதி சிவானந்தி ஹரிதர்ஷன்
நிறுவனர் - இயக்குநர், நிர்த்தனா நடனப்பள்ளி
அவர்களின் மாணவியுமான

தானியா சுரேந்திரன்
அவர்களின்

பரதநாட்டிய அரங்கேற்றம்

சனிக்கிழமை, ஜனவரி 17ம் திகதி 2026
மாலை 5.30 மணிக்கு
பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில்
நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினர்
'கலாகீர்த்தி', 'கலாபூஷணம்'
ஸ்ரீமதி சாந்தினி சிவநேசன்
இயக்குனர், கலாபவனம், கொக்குவில்

கௌரவ விருந்தினர்
'கலாசூரி' 'ஆச்சார்ய கலா சாகர' 'விஷ்வ ராங்கபிமானய' 'வனிதாபிமான'
ஸ்ரீமதி வாசுகி ஜெகதீஸ்வரன்
நிறுவனர்-இயக்குனர், நாட்டிய கலா மந்திர்



அனைவரையும் அன்போடு அழைக்கின்றோம்!








# 'மலையக தியாகிகள் தினம்' உணர்வுபூர்வமாக அனுஷ்டிப்பு

மலையக மக்களின் தொழில், மொழி மற்றும் பொருளாதார உரிமைகளுக்காகப் போராடி உயிர்நீத்த தியாகிகளை நினைவுகூரும் 'மலையக தியாகிகள் தினம்' நேற்று கொட்டகலையில் உணர்வுபூர்வமாக நடைபெற்றது.

1940 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 10ஆம் திகதி முல்லோயா தோட்ட சம்பள உயர்வுப் போராட்டத்தின் போது சுட்டுக்கொல்லப்பட்ட கோவிந்தன் உள்ளிட்ட அனைத்துத் தியாகிகளையும் நினைவுகூர்ந்து 'பிடிதளராதே' அமைப்பால் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

கொட்டகலை கொமர்ஷல் லேக் வளாகத்தில் நடைபெற்ற பிரதான நினைவேந்தலில், பல்வேறு கலை நிகழ்ச்சிகள் மற்றும் சிவில் சமூகப் பிரதிநிதிகளின் உரைகள் இடம்பெற்றன.

முல்லோயா கோவிந்தனின் தியாகத்தை அடையாளப்படுத்தி ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 10 ஆம் திகதியை மலையக மக்கள் தியாகிகள் தினமாகக் கடைப்பிடித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.




















# யாழ். பல்கலைக்கழக மாணவர்களினால் நினைவுகூரப்பட்ட மலையக தியாகிகள்!

(எஸ்.நிதர்ஷன்)

மலையகத் தமிழர்களின் தொழில் உரிமை, மொழி உரிமை, பொருளாதார உரிமை உட்பட உரிமைப் போராட்டத்தில் உயிர்நீத்த மலையக தியாகிகளை நினைவுகூரும் “மலையக தியாகிகள் தினம்“ நேற்று யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது.

1939 ஆம் ஆண்டு டிசம்பர் மாத இறுதியில் ஆரம்பமாகி 1940 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வரை தொடர்ந்த பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான சம்பள உயர்வுப் போராட்டத்தின் போது, தமது மக்களுக்காக 1940 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 10ஆம் திகதி முல்லோயா கோவிந்தன் உயிர்நீத்தார். அவரின் நினைவு நாளிலேயே ஒட்டுமொத்த மலையக தியாகிகளும் நினைவுகூரப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.













# கல்வி மறுசீரமைப்பு கட்டாயம் நடக்கும்!

## ஜனாதிபதி அநுர திட்டவட்டம்



பெற்றோருக்குச் சுமையையும் பிள்ளைகளுக்குத் துயரத்தையும் கொடுக்காத ஒரு கல்வி முறையை நாட்டில் உருவாக்கப்போவதாக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

நாட்டின் மாணவர் தலைமுறைக்கு சர்வதேசத்தை வெல்லக்கூடிய நவீன கல்வி முறை அவசியம் என்றும், கிராமிய பிள்ளைகளை வறுமைச் சுழற்சியில் இருந்து மீட்கக்கூடிய ஒரே வழி கல்வி மட்டுமே என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

பொய்ப் பிரச்சாரங்களுக்கு அடிபணியாமல், நாட்டுக்குத் தேவையான கல்வி மறுசீரமைப்பு செயல்முறையைத் தொடர்ந்து முன்னெடுத்து, மாணவர்களுக்குசிறந்ததொருஎதிர்காலத்தைஉருவாக்க நடவடிக்கை எடுப்பதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

அனுராதபுரம் மாவட்டத்தின் ராஜாங்கனை, தலாவ, நொச்சியாகம, மகாவிலச்சிய, பதவிய, கெபிதிகொல்லாவ, மிஹிந்தலை, ரம்பேவ ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் அனர்த்தங்களினால் முழுமையாக சேதமடைந்த வீடுகளுக்கு இழப்பீடு வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் ராஜாங்கனை வெவே விகாரைக்கு அருகில் நடைபெற்றது. இந்த நிகழ்வில்கலந்துகொண்டுஉரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

மக்கள் ஆணை வழங்கிய எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் அதேவேளை, அனர்த்தத்துக்குப் பிறகு இருந்த நிலையை விடவும் ஒரு சிறந்த நாட்டையும், மக்கள் வாழ்வையும் கட்டியெழுப்பும் திட்டத்தை அரசு தற்போது வெற்றிகரமாகச் செயல்படுத்தி வருகின்றது என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

வீடுகளை நிர்மாணிக்கும் பணிகளை அடையாளப்படுத்தும் வகையில் வீடொன்றுக்கு அடிக்கல் நாட்டிய ஜனாதிபதி, அதனைத் தொடர்ந்து நடைபெற்ற பயனாளிகளுக்கு காசோலைகளை வழங்கும் நிகழ்விலும் இணைந்து கொண்டார்.

வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க, வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் நீர்வழங்கல் அமைச்சர் சுசில் ரணசிங்க, வடமத்திய மாகாண ஆளுநர் வசந்த ஜினதாச, பிரதேச மக்கள் பிரதிநிதிகள், அனுராதபுரமாவட்டசெயலாளர்ரஞ்சித்விமலசூரிய, பிரதேச செயலாளர்கள் உள்ளிட்ட அரச அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.
















## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

சிறிதரன், சத்தியலிங்கம், சாணக்கியன், குகதாசன் ஆகிய நால்வரே இப்போது அரசியல் குழுவில் இருக்கின்றனர். கட்சித் தலைவர் சி.வி.கே.சிவஞானம், பொதுச் செயலாளர் எம்.ஏ.சுமந்திரன், கலையழகன், துரைராஜசிங்கம், நிர்வாகச் செயலாளர் குலநாயகம் ஆகியோர் அரசியல்குழுவில் ஏனைய உறுப்பினர்கள்.

இப்போதைய எம்.பிக்களில் கோடீஸ்வரன், சிறிநேசன், ரவிகரன், சிறிநாத் ஆகியோர் அரசியல் குழுவில் இல்லை.

ஏழு முதல் ஒன்பது பேர் கொண்டவர்களாக அரசியல் குழு இருந்து கொண்டிருக்கின்றது. முன்னைய நாடாளுமன்றத்தில் சம்பந்தன், சிறிதரன், சுமந்திரன், கலையரசன் ஆகிய நான்கு தமிழரசின் எம்.பிக்கள் கட்சியின் அரசியல் குழுவில் இருந்தனர். சார்ள்ஸ் நிர்மலநாதனும், சாணக்கியனும் அப்போது எம்.பிக்களாக இருந்த பொழுதும், அரசியல் குழுவில் இடம்பெறவில்லை. தாங்கள் இரண்டு எம்.பிக்கள் மாத்திரம்தான் அரசியல் குழுவில் இடம் பெறாத காரணத்தினால் தங்களையும் அரசியல் குழுவில் சேர்த்துக் கொள்ளும்படி அவர்கள் இருவரும் அப்போது கோரினர். கட்சி யாப்புப்படி அதனைச் செய்ய முடியாது என்று அப்போதைய கட்சித் தலைவர் மாவை சேனாதிராஜா முதல் கொண்டு சிறிதரன் வரை எல்லோரும் அதனை எதிர்த்தனர்.

இப்போது அதே சிறிதரன் உட்பட இருக்கின்ற எட்டு எம்பிக்களும் தாங்கள் அனைவரும் அரசியல் குழுவில் உள்ளடக்கப்பட வேண்டும் என்று ஒரு கோரிக்கைக் கடிதத்தை கட்சிக்கு எழுதியிருக்கிறார்கள் என அறிய வருகின்றது. இந்த கடிதத்தை முன்னின்று எழுதியவர் மட்டக்களப்பு மாவட்ட எம்.பியான சிறிநாத்தான் எனத் தெரிகிறது.

ஏற்கனவே மத்திய குழு, குறிப்பிடப்பட்ட உறுப்பினர்களுக்கு மேற்பட்ட எண்ணிக்கைக்கு கண்மூடித்தனமாக அப்போதைய தலைவர் மாவை சேனாதிராஜாவினால் அதிகரிக்கப்பட்டமையே இன்று கட்சியை நீதிமன்றத்தில் – வழக்கில் – கொண்டு போய் மாட்டிவிட்டிருக்கின்றது.

அதுபோலவே அரசியல் குழுவையும் தம்மிஷ்டப்படி யாரும் எண்ணிக்கை ரீதியில் அதிகரிக்க முடியாது.

கட்சியின் யாப்புப்படி அரசியல் குழுவுக்கு மாற்று உறுப்பினர்களை கூட்டத்துக்கு அழைக்க முடியும். அவர்கள் பார்வையாளர்களாக வந்திருந்து கருத்து தெரிவித்துப் போகலாம். அவ்வப்போது அரசியல் குழு உறுப்பினர்கள் அல்லாத நாடாளுமன்ற உறுப்பினர்களை அவர்களின் கருத்துக்களைச் செவிமடுப்பதற்காக அரசியல் குழு தன்னுடைய கூட்டத்துக்குச் சேர்த்துக் கொள்வது வழமை. அதற்கு இடம் உண்டு. ஆனால் இப்போது அரசியல் குழுவில் இடம் பெறாத நான்கு எம்.பிக்களும் தங்களையுன் அரசியல் குழுவில் சேர்த்துக் கொள்ளும்படி கோரிக்கை முன்வைத்தாலும் கட்சி யாப்புக்குஅமையஅதனைநடைமுறைப்படுத்த முடியாது என்பதுதான் நிலைமை.

முன்னர் செயல்பட்ட அரசியல் குழுவில் கட்சியின் சிரேஷ்ட உப தலைவர் செல்வராஜா காலமான போது அந்த இடத்துக்கு சாணக்கியன் சேர்த்துக் கொள்ளப்பட்டார். அதுபோல சம்பந்தன் காலமான போது அந்த இடத்துக்கு குகதாசன் சேர்த்துக் கொள்ளப்பட்டார். மாவை சேனாதிராஜா தலைவர் பதவியில் இருந்து விலக அந்த இடத்துக்கு சிவஞானம் வந்துவிட்டார்.

ஆக, இப்போது அரசியல் குழுவில் இருக்கும் உறுப்பினர்களில் யாரேனும் ஒருவர் பதவியை ராஜினாமா செய்தால் அல்லது மரணமடைந்தால் அந்த இடத்துக்கு வெற்றிடம் ஏற்படும் போது, யாரேனும் நாடாளுமன்ற உறுப்பினரை உள்கொண்டு வரலாமே தவிர, இப்போதைய எம்.பிக்கள் கோருகின்றமை போல மிஞ்சி இருக்கும் அனைவரையும் அரசியல் குழுவில் சேர்ப்பதற்கான வாய்ப்புகள் கட்சியின் யாப்பு ரீதியாக இல்லை என்றே தெரிகின்றது.

இந்த நான்கு எம்.பிக்களையும் அரசியல் குழுவில் சேர்த்தால் அக்குழுவில் தம் செல்வாகை உறுதிப்படுத்தலாம் என்று கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் சிறிதரன் எண்ணினாலும், அப்படி அவர்களை கட்சியின் அரசியல் குழுவில் சேர்ப்பதற்கான வாய்ப்பு இல்லை என்றே தோன்றுகின்றது.

## ஹரிணி மீதான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட அவர், குறித்த நம்பிக்கையில்லாப் பிரேரணை நாடாளுமன்றத்தில் வாக்கெடுப்புக்கு வரும் பட்சத்தில், அதற்கு எதிராக வாக்களிப்பதா அல்லது வாக்கெடுப்பில் கலந்துகொள்ளாமல் இருப்பதா என்பது குறித்து, தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழு கூடி இறுதித் தீர்மானம் எடுக்கும் எனவும் குறிப்பிட்டார்.

கல்வித் துறை தொடர்பான சில நிர்வாக மற்றும் கொள்கை ரீதியான விடயங்களை முன்னிறுத்தியே, பிரதமர் ஹரிணி அமரசூரியவுக்கு எதிராக இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவர ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானித்துள்ளது.

எனினும், தற்போதைய அரசியல் சூழலில் இந்தப் பிரேரணை ஒரு கொள்கைச் சண்டையாக விட, அரசியல் அழுத்தத்தை உருவாக்கும் முயற்சியாகவே பார்க்கப்படுகின்றது.

இந்நிலையில், சிறுபான்மைக் கட்சிகள், குறிப்பாக வடக்கு –கிழக்கு மக்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தைக் கொண்டுள்ள கட்சிகள், இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பில் தெளிவான நிலைப்பாட்டையே எடுத்து வருகின்றன. அந்தவகையில், தமிழரசுக் கட்சியின் தற்போதைய நிலைப்பாடு, ஆட்சி – எதிர்க்கட்சி அரசியல் மோதல்களிலிருந்து விலகி, தமது மக்களின் அரசியல் மற்றும் நிர்வாக கோரிக்கைகளுக்கு முன்னுரிமை அளிக்கும் அணுகுமுறையாகவே கருதப்படுகின்றது.

இதற்கிடையில், கல்வி அமைச்சரான பிரதமர் ஹரிணி அமரசூரியவை நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சந்தித்து, கல்வி, மாகாண நிர்வாகம், வடக்கு – கிழக்கு தொடர்பான அபிவிருத்தி உள்ளிட்ட பல முக்கிய விடயங்கள் குறித்து கலந்துரையாடினார்கள் என்று சிவஞானம் சிறீதரன் எம்.பி. தெரிவித்தார். இந்தச் சந்திப்பு, இரு தரப்புகளுக்கிடையிலான அரசியல் உரையாடலின் ஒரு பகுதியாகவே பார்க்கப்படுகின்றது.

மொத்தத்தில், பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப்பிரேரணை தொடர்பில் தமிழரசுக் கட்சி நேரடி ஆதரவு வழங்காத நிலைப்பாட்டை எடுத்துள்ள போதிலும், வாக்கெடுப்பு நேரத்தில் எடுக்கப்படும் முடிவு அரசியல் சூழ்நிலையைப் பொறுத்தே அமையும் என்பது குறிப்பிடத்தக்கது.

## கல்வி அமைச்சருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

நம்பிக்கையில்லாப் பிரேரணை பொருத்தமற்ற – நெறிமுறையற்ற அரசியல் நடவடிக்கை என்று ஆளுங்கட்சி சுட்டிக்காட்டியுள்ளது.

இந்நிலையிலேயே மொட்டுக் கட்சியின் பொதுச்செயலாளர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவிக்கையில்,

“நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் மூன்று எம்.பிக்களும் வாக்களிப்பார்கள்.

தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மக்கள் பக்கம் நிற்கின்றனர் எனில் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிக்க வேண்டும்.

அதேவேளை, எமது நாட்டுக்குப் பொருத்தமானதொரு கல்வி மறுசீரமைப்பே அவசியம். எமது ஆட்சியின் கீழ் அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும்.” – என்றார்.

## பிரதமருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

என்ற வகையிலும் கல்வி அமைச்சர் என்கின்ற ரீதியிலும் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவுடன் எமது அமைப்புக்கும் எனக்கும் மிக முக்கியமான தீர்க்கமான கொள்கை முரண்கள் இருக்கின்ற போதிலும் 6ஆம் வகுப்பு மாணவர்களுக்கான பாடத்திட்டத்தில் ஏற்பட்ட சர்ச்சைக்குரிய விடயம் தொடர்பில் ஹரிணி அமரசூரியவுக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் முற்றிலும் ஏற்றுக்கொள்ளவே முடியாத அவதூறு பிரசாரங்களை நாம் ஏற்றுக்கொள்ளவில்லை.” – என்றுள்ளது.

## ‘கொண்ட ரஞ்சி’...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இத்தாலிக்குத் தப்பிச் செல்ல முயன்ற போது டுபாயில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

அந்த நாட்டுப் பாதுகாப்புப் பிரிவினரால் மேற்படி சந்தேகநபர் அவரது மனைவி மற்றும் பிள்ளைகளுடன் கைது செய்யப்பட்ட நிலையில் பின்னர் மனைவியும் பிள்ளைகளும் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீரவின் ஒருங்கிணைப்புச் செயலாளரின் கொலையுடன் தொடர்புடையவர் என்ற குற்றச்சாட்டில் பொலிஸாரால் தேடப்பட்டு வந்த ஒருவரே இந்தக் “கொண்ட ரஞ்சி”– என்ற ரஞ்சித் குமார எனத் தெரிவிக்கப்படுகின்றது.

சந்தேகநபர் தற்போது டுபாய் பொலிஸ் தலைமையகத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, “கொண்ட ரஞ்சி“ ஐக்கிய அரபு இராஜ்ஜியத்தில் கோல்டன் விசா எனப்படும் 10 வருடங்களுக்கான வதிவிட விசா உரிமையாளர் என்பது விசாரணைகளில் தெரியவந்துள்ளது.





# காரைதீவுக் கடற்படை முகாமை காவு கொள்ளத் துடிக்கும் கடல்!

(வி.ரி. சகாதேவராஜா)

காரைதீவு கடற்கரையோரம் அமைந்துள்ள கடற்படைமுகாம் சமகாலத்தில் கொந்தளிக்கும் கடலால் நாளுக்கு நாள் காவு கொள்ளப்பட்டு வருகிறது.

சீரற்ற காலநிலை காரணமாக கடல் கொந்தளிப்பான சூழ்நிலை காணப்படுகின்றது. குறிப்பாக காரைதீவுப் பகுதியிலே கல்லணை இல்லாத காரணத்தால் கடல் அரிப்பு மிகவும் வேகமாக இருக்கின்றது.

அதிலும் காரைதீவு கடற்படை முகாம் அமைந்துள்ள பகுதியிலும் அருகில் இருக்கக்கூடிய பிள்ளையார் ஆலயம் மற்றும் மாளிகைக்காடு மைய வாடி பகுதியிலும் கூடுதலான கடலரிப்பு வேகமாக நிகழ்ந்து வருவதைக் காணக் கூடியதாக இருக்கின்றது.





# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## எடுப்பார் கைப்பிள்ளை

நாட்டின் கல்வித்துறை எடுப்பார் கைப்பிள்ளையாகி, சிக்கிச் சீரழிந்துவிடும் என்று அச்சப்படும் சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றது.

ஆட்சி அதிகாரத்துக்கு வரும் தரப்புகள், நிர்வாகம் தங்களின் கட்டுப்பாட்டில் என்ற இறுமாப்பில் கல்விச் சீர்திருத்தம் என்ற பெயரில் தம்மிஷ்டப்படி எத்தகைய முறைமையையும் நடைமுறைக்குக் கொண்டு வரலாம் என்ற சிந்தனைப் போக்கில் செயற்படுகிறார்கள் எனத் தெரிகின்றது.

இது, நாட்டின் கல்வித்துறை பேராபத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றது என்பதற்கான சமிக்ஞையாகவே படுகின்றது.

ஏற்கனவே தேசிய மக்கள் சக்தி அரசுதான் அதிகாரத்துக்கு வந்ததும் தன்னிஷ்டப்படி அடுத்த ஒரு வருடத்துக்குள் கல்விச் சீர்திருத்தம் என்று புதிய விடயத்தை எதேச்சாதிகாரமாக முன்னெடுப்பதாக குற்றச்சாட்டுக்கள் வைக்கப்படுகின்றன.

இந்தக் கல்விச் சீர்திருத்தங்கள் தொடர்பில் அதன் பங்காளர் தரப்புகளோடு சரியான கலந்துரையாடல்கள், ஆய்வுகள், கருத்துப் பரிமாறல்கள் முன்னெடுக்கப்படவில்லை என்றும், அதிகாரவர்க்கம் தன் எண்ணப்படி கல்விச் சீர்திருத்தம் என்ற பெயரில் பல மாற்றங்களை முன்னெடுக்கின்றது என்றும் சம்பந்தப்பட்ட தரப்புகளில் இருந்து குற்றச்சாட்டுக்கள் அடுக்கடுக்காக வெளிப்படுகின்றன.

மக்கள் வாக்களித்துத் தங்களை ஆட்சியதிகாரத்துக்குத் தெரிவு செய்தார்கள் என்பதற்காக உரிய கலந்துரையாடல்கள், பங்குதாரர்களுடன் ஆய்வுகள், கருத்து பரிமாறல்கள் போன்றவை செய்யாமல் தம்மிஷ்டப்படி அதிகார வர்க்கம் கல்விச் சீர்திருத்தம் போன்ற முக்கிய விடயங்களை இறுதி செய்து முன்னெடுப்பது முற்றிலும் தவறாகும்.

இதே சமயம் சிறிலங்கா பொதுஜன பெரமுன (மொட்டு கட்சி) ஆட்சிக்கு வந்ததும் தேசிய வளர்ச்சியை நோக்கமாகக் கொண்ட பொருத்தமான கல்விச் சீர்திருத்தங்கள்அறிமுகப்படுத்தப்படும் என்று அக்கட்சியின் தேசிய அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஆக, ஆட்சியதிகாரத்துக்கு வருவோர் எல்லோரும் கல்விச் சீர்திருத்தம் என்ற பெயரில் கல்வித்துறையை தங்கள் கைப்பிள்ளைகளாக மாற்றி, தம் இஷ்டத்துக்கு நடக்க போகின்றார்கள் என்றுதான் தோன்றுகின்றது.

1981 இல் ரணில் விக்கிரமசிங்க தமது இளவயதில் கல்வி அமைச்சராக இருந்தபோது இந்த நாட்டுக்கு ஒரு முக்கிய கல்விச்சீர்திருத்தத் திட்டத்தைக் கொண்டு வந்தார். நீண்ட காலம் ஆராயப்பட்டு, பல தரப்பினரினதும் கருத்துகள் உள்வாங்கப்பட்டு, அவற்றின் அடிப்படையில் கல்விச் சீர்திருத்தத்துக்கான வெள்ளை அறிக்கை ஒன்று நாட்டினதும், மக்களினதும், புத்திஜீவிகளினதும், சம்பந்தப்பட்ட தரப்புகளினதும் கருத்துக்கும் ஆய்விற்கும் கலந்துரையாடலுக்கும் முன் வைக்கப்பட்டது. அதன் அடிப்படையில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்பட்டு, இறுதியில் கல்விச் சீர்திருத்தம் மேற்கொள்ளப்பட்டது.

இப்போதைய தேசிய மக்கள் சக்தி அரசு தன்னிஷ்டப்படி நடத்தும் கல்விச் சீர்திருத்த முறைமை அல்ல அப்போது பின்பற்றப்பட்டது. ரணில் விக்ரமசிங்கவின் அந்த முன்னுதாரணத்தை - பல தரப்புகளினதும் கருத்துகளை உள்வாங்கி முன்னெடுக்கும் அந்த முறைமையை - இப்போதைய அரசு பின்பற்றி இருக்குமானால் - வெள்ளை அறிக்கை தயாரித்து, சமர்ப்பித்து, அதன் அடிப்படையில் ஆய்வுகள் நடத்தி, கலந்துரையாடல்களை முன்னெடுத்து, அதன் முடிவிக் கல்விச் சீர்திருத்தத்தை இறுதி செய்திருந்தால் - இப்போதைய இந்தச் சிக்கல்கள், கருத்து வேறுபாடுகள், குளறுபடிகள் எல்லாம் வந்திருக்க மாட்டாது என்பது நிச்சயம்.



# கோமாரியில் மீனவர் குடிசைகளைக் காவு கொண்ட கடல்!

**(வி.ரி.சகாதேவராஜா)**

பொத்துவிலை அடுத்துள்ள கோமாரிப் பிரதேசத்தில் கடல் சீற்றத்தால் அங்கிருந்த மீனவர்கள் குடிசைகள் கடலுக்குள் காவு கொள்ளப்பட்டிருக்கின்றன.

இடம்பெயர்ந்திருந்த மீன்வர்கள் நேற்றுக் காலையில் எழுந்து பார்த்தபோது தமது குடிசைகளைக் காணாது அதிர்ச்சி அடைந்தார்கள். குடிசைகள் கடலுக்குள் அள்ளுண்டு கொண்டு செல்லப்பட் டுள்ளன.

இருந்த படகுகளை வீதி வரை இழுத்து பாதுகாப்பாக வைத்திருக்கின்றார்கள்.

நேற்றும் கடலில் சீற்றமாக காணப் பட்டது. மீனவர்கள் கடற்றொழிலை இழந்து இருக்கிறார்கள் என பொத்துவில் பிரதேச சபை உறுப்பினர் பி.சுபோதரன் தெரிவித்தார்.










# ஏறாவூர் மீராக்கேணியில் ஆயுதங்கள் தேடி நேற்று நிலத்தைத் தோண்டும் நடவடிக்கை

(கனகராசா சரவணன்)

ஏறாவூர் பொலிஸ் பிரிவிலுள்ள மீரா கேணியில் தனியார் காணி ஒன்றில் ஆயுதங்களைத் தேடி நேற்று சனிக் கிழமை பொலிஸார், விசேட அதிரடிப் படையினர் இணைந்து நிலத்தை தோண் டும் நடவடிக்கை முன்னெடுத்தனர். எனி னும் எந்த பொருள்களும் மீட்கப்பட வில்லை என ஏறாவூர் பொலிஸெ தெரி வித்தனர்.

கைவிடப்பட்டுள்ள தனியார் காணியில் ஆயுதங்களை புதைத்து வைக்கப் பட்டி ருக்கின்றன என இராணுவப் புலனாய்வு பிரிவுக்குக் கிடைத்த தகவல் ஒன்றின் அடிப்படையில் அதனைத் தோண்டிச் சோதனை செய்வதற்காக ஏறாவூர் நீதிவான் நீதிமன்றில் பொலிசார் அனு மதியைப் பெற்றனர்.

இதனையடுத்து அந்தக் காணியில் அடையாளமிடப்பட்ட இடத்தில் நேற்றுக் காலை 9.00 மணிக்கு ஏறாவூர் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமையில் கிராம உத்தியோகத்தர் உட்பட தொடர் புடைய திணைக்கள அதிகாரிகள் முன் னிலையில் பைக்கோ இயந்திரம் கொண்டு பொலிசார் விசேட அதிரடிப்படையினர் இணைந்து தோண்டி சோதனையிட்ட னர்.

இந்த சோதனையில் எந்த விதமான ஆயுதங்களோ பொருள்களோ மீட்கப்பட வில்லை. இதையடுத்து தோண்டிய குழியை அவர்கள் மண் போட்டு மூடி னர்.













# அரியாலையில் மோ. சைக்கிளை மோதித்தள்ளிய அதிவிரைவு ரயில்

(மரியசீலன் திலைக்ஸ்)

யாழ்ப்பாணம் அரியாலை 13ஆம் கட்டை பகுதியில் நேற்றுப் பிற்பகல் பாதுகாப்பற்ற கடவையில் அதிவிரைவு ரயிலுடன் மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் காயமடைந்தார்.

யாழில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த அதிவிரைவு ரயிலுடனேயே மோட்டார் சைக்கிள் மோதியது.

விபத்தில் காயமடைந்த அரியாலையை சேர்ந்த 23வயதுடைய நபர் யாழ் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டார்.

விபத்துத் தொடர்பாக போக்குவரத்துப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தப் பாதுகாப்பற்ற ரயிக் கடவையில் கடந்தகாலங்களில் உயிரிழப்பு சம்பவங்கள் பதிவாகியுள்ளன..உரிய பாதுகாப்பு கடவை அமைக்ககோரி பல முறை போராட்டம் செய்தும் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.



# கரடியனாறு அம்பகஹவத்தை பிரதேசத்தில் மின்சாரம் தாக்கியதில் யானை உயிரிழந்தது

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு கரடியனாறு பொலிஸ் பிரிவிலுள்ள பெரிய புல்லுமலை அம்பகஹவத்தை பிரதேசத்தில் காணி ஒன்றில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட மின்சார வேலியில் சிக்கி யானை ஒன்று உயிரிழந்த சம்பவம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை அதிகாலையில் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அந்தப் பகுதியில் உள்ள தனது காணியில் பயிரப்பட்ட பயிர்களை காட்டு விலங்குகளில் இருந்து காப்பாற்றுவதற்காக காணி உரிமையாளர் காணியை சுற்றி சட்டவிரோதமாக மின்சார வேலி அமைத்துள்ளார்.

இந்நிலையில் நேற்று முன்தினம் அதிகாலையில் யானை ஒன்று மின்சார வேலியில் மோதியதை அடுத்து மின்சாரம் தாக்கியதில் யானை உயிரிழந்துள்ளது.இது தொடர்பாக வனவிலங்கு திணைக்கள அதிகாரிகள், பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# கலென்பிந்துனுவெவவில் வீட்டுக்கு தீவைப்பு:

## பலி எண்ணிக்கை 4 ஆக உயர்வு



**(உடப்பு க.மகாதேவன்)**

அநுராதபுரம், கலென்பிந்துனுவெவ பிரதேசத்தில் நபர் ஒருவர் வீடொன்றுக்கு தீ வைத்த சம்பவத்தில், படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த 15 வயது மகளும் சிகிச்சைப் பலனின்றி உயிரிழந்துள்ளார்.

அனுராதபுரம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே இந்தச் சிறுமி நேற்றுக் காலை உயிரிழந்துள்ளார். இவரது பிரேத பரிசோதனை நேற்று இடம்பெறவிருந்தது.

கலென்பிந்துனுவெவ பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நுவரகம் கொலனி, படிக்காரமடுவ பிரதேசத்தில் கடந்த 06 ஆம் திகதி இச்சம்பவம் இடம்பெற்றிருந்தது. தீ வைத்த 43 வயதான குடும்பத் தலைவரும், அவரது 13 வயது மகளும் சம்பவ இடத்திலேயே தீயில் சிக்கி உயிரிழந்திருந்தனர்.

படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த 36 வயதான மனைவியும் அன்றைய தினமே உயிரிழந்திருந்தார்.

இதனையடுத்து, தற்போது 15 வயதுடைய மூத்த மகளும் உயிரிழந்தமையை அடுத்து, ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் இச்சம்பவத்தில் பலியாகியுள்ளனர்.

இதேவேளை, தீ விபத்தில் சிக்கிய 20 வயதான மகனும், 66 வயதான மாமியாரும் தொடர்ந்தும் தீக்காயங்களுடன் அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.






# கஞ்சாவுடன் கைதான இளைஞனை 4நாள்கள் தடுத்து வைத்து விசாரிக்க நீதிமன்றம் அனுமதி

**(மரியசீலன் திலைக்ஸ்)**

யாழ்ப்பாணம், வடமராட்சி கிழக்கு, செம்பியன்பற்று வடக்கு பகுதியில் இரண்டு கிலோ கேரளக் கஞ்சாவுடன் நேற்று முன்தினம் கைதான இளைஞனை நான்கு நாள்கள் தடுத்துவைத்து விசாரிக்க கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

செம்பியன் பற்று வடக்கு பகுதியில் பயணித்த ஓட்டோ ஒன்று விசேட அதிரடிப்படையால் நேற்று முன்தினம் திடீர் சுற்றிவளைப்பு செய்யப்பட்ட போது அதிலிருந்து இரண்டு கிலோ கேரளக் கஞ்சா கைப்பற்றப்பட்டது. ஓட்டோ சாரதி கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட செம்பியன்பற்று வடக்கை சேர்ந்த 19 வயது இளைஞர் நேற்றைய தினம் மருதங்கேணி பொலிஸாரால் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டார். அந்த இளைஞனைத் தொடர்ந்து தடுத்துவைத்து விசாரணை செய்ய பொலிஸார் நீதிமன்றில் அனுமதி கோரிய நிலையில், மேலும் நான்கு நாள்கள் அவரைப் பொலிஸ் காவலில் தடுத்துவைத்து விசாரணை செய்ய கிளி நொச்சி நீதிமன்ற நீதிவான் அனுமதி வழங்கினார்.





# தமிழர் விடுதலைக் கூட்டணியின் நிலைமை இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கும் ஏற்படுமா?

சந்தி சிரிக்கும் சங்கதிகளுடன் உள்கட்சி முரண்பாடுகளில் சிக்கித் தவிக்கும் தமிழரசுக் கட்சியின் நிலை பரிதாபத்துக்குரியது.

தொலைநோக்கு கோட்பாட்டுச் சித்தாந்தத்தில் வலிமையான நோக்கு நிலையோடு உருவாக்கப்பட்ட கட்சி தலைமைத்துவ முரண்பாடால் சின்னா பின்னமாகிக் கிடக்கிறது.

ஒரு பக்கம் நீதிமன்றத்தில் இழுபறி. மறுபக்கம் கட்சிக் கட்டுப்பாடு இன்றி ஆங்காங்கே தான்தோன்றித்தனமான செயற்பாடுகள். நாடாளுமன்றக் குழுவிலும் ஒருமித்த நிலை இல்லை. மத்திய குழுவும் பல கூறுகளாக உள்ளது. உள்ளூராட்சி மன்றங்கள் கட்சியின் எந்தக் கொள்கையும் பின்பற்றாமல், நிர்வாகிகள் பதவி சுகபோகிகளாக உலா வருகிறார்கள். கழுதை தேய்ந்து கட்டெறும்பாகிய கதையாகவே தமிழரசுக் கட்சியின் நிலை தொடர்கிறது. உள் விவகாரங்களை முடிவுக்குக் கொண்டு வந்து, கட்சியை முன்னோக்கி நகர்த்த வேண்டும் என எவரும் இதயசுத்தியாக சிந்திப்பவர்களாகத் தெரியவில்லை.

அணிகளாகவும் குழுக்களாகவும் பிரதேச ரீதியாகவும் தங்களுடைய காய் நகரத்தல்களை தத்தமது அறிவுத்திறனுக்கு ஏற்ப செயல் படுத்துகிறார்களே தவிர, ஓர் இனமாகவோ, தேசமாகவோ, கோட்பாட்டு ரீதியிலோ, தமிழ் மக்களினுடைய இருப்பில் உளப்பூர்வமான அக்கறை கொண்டவர்களாகவோ செயல்படுபவர்களாகத் தெரியவில்லை என மக்கள் மத்தியில் விமர்சனங்கள் எழுகின்றன.

ஒருவரை ஒருவர் எப்படி வீழ்த்தலாம், ஒருவரை ஒருவர் எப்படி பொது வழியில் மக்கள் மத்தியில் அம்பலப்படுத்தலாம் என்பதில்தான் நேரத்தைச் செலவிடுகிறார்கள். தமிழ் மக்களின் ஏகோபித்த விருப்பை மிக நீண்ட காலமாக பெறுகின்ற கட்சி



- வி.எஸ்.சிவகரன் -

– கடந்த தேர்தலிலும் முதன்மைக் கட்சியாக முன்னிலை வகித்த கட்சி – பொறுப்புக் கூறல் விடயத்தில் பொறுப்பின்றி செயல்படுகிறது என கட்சி அங்கத்தவர்களிடத்திலும் மூத்த உறுப்பினர்கள் மத்தியிலும் வாக்காளர்களிடத்திலும் பல்வேறு விதமான எதிர்ப்பு உணர்வுகளை ஏற்படுத்தியிருக்கிறது.

இது தொடர்ச்சியாகவே நீளுகின்ற காரணத்தினால், வாக்காளர்கள் மனமாற்றத்துக்கு உட்பட்டு மடை மாற்றம் ஆகும் செயற்பாடுகளே நடைபெறுகின்றன என்பது கண்கூடு. தமது கட்சிக்கான வாக்கு குறைவதை கிஞ்சித்தும் பொருள்படுத்தாத பொறுப்பற்ற தலைமை, தமது பதவியை நிலையாக நிறுத்தி அதன் மூலம் ஆளுகை செய்ய முனைகிறார்களே தவிர, மக்கள் நலன் சார்ந்த செயல் திட்டங்களை முன்னெடுப்பதற்கு இவர்களில் எவரும் சிரத்தை கொள்பவர்களாகப் புலப்படவில்லை.

கட்சி அங்கத்தவர்கள் மத்தியிலோ, மக்களிடத்திலோ, பொது விருப்புக்கு உட்பட்டு தமிழ்த் தேசிய இருப்பை ஆழமாக நேசித்து, அக்கறை செலுத்தி, அனைவரையும் அரவணைத்து, ஒரு கட்டமைப்பின் கீழ் ஒரு நோக்கத்திற்காக அணி சேரக்கூடிய ஏனைய கட்சிகளையும் இணைத்து செல்லக்கூடிய பக்குவமும், நிதானமும், நேர்மையும், நோக்கமும், தெளிவும், அறிவும், ஆற்றலும், ஒருங்கே இணைந்து செயலாற்றக்கூடிய வல்லமை உடைய – மக்கள் மத்தியில் ஒரு கூட்டு விசுவாசமும் நம்பிக்கையும் ஏற்படுத்தக்கூடிய –,எவரும் தமிழரசு கட்சியில் தற்பொழுது இருக்கின்றார்கள் என உறுப்பினர்களுக்கோ வாக்காளர்களுக்கோ தென்படவில்லை.

மிக வயது முதிர்ந்தவர் தலைவராகவும், மக்களால் பெருவிருப்புக்கு உட்படாதவர் செயலாளராகவும் இரண்டு பதவிகளும் தற்காலிகமாக இருப்பதனாலும் பொது விருப்புக்கு உட்படாதவர்கள் என்கின்ற எதிர்பார்ப்பு வாதத்தின் கருத்துக்களும் இல்லாமல் இல்லை. இவ்விருவரும் மக்கள் மன்றத்தில் பல்வேறு விதமான விமர்சனங்களையும் எதிர்ப்புக்களையும் எதிர்கொள்ளும் நிலையில் இருப்பதனால் அவர்களால் செயல்படுத்தப்படுகின்ற நன்னோக்கு நிர்வாக முறைமைகள் கூட ஏனையவர்களுக்கு வெறுப்பாகவே தோன்றும். இது யதார்த்தம். இந்த யதார்த்தத்தைப் புரிந்து கொண்டு, இனத்தினுடைய உணர்வுகளின் உண்மை தன்மையை உணர்ந்து கொண்டு, செயலாற்றுகின்ற சமத்துவ நிலை உருவாக்கப்படாவிட்டால் இரண்டு தரப்பும் வலிமை இழக்க கூடிய கள நிலை வளர்ச்சி அடைகிறது. அது இனத்தின் இருப்பிற்கு மிகப்பெரும் பாதகமான நிலைப்பாட்டை ஏற்படுத்தும்.

இன அழிப்புக்கு உள்ளாக்கப்பட்ட ஒரு தொன்மை மிகு இனக் குழுமத்தை வழிநடத்துகின்றோம் என்கின்ற உணர்வோ அல்லது எண்ணமோ இவர்களிடத்தில் இருப்பதாகவுன் தெரியவில்லை.

நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் அரசமைப்பு பேரவை விவ

தொடர்ச்சி▼




# தமிழர் விடுதலைக் கூட்டணியின் நிலைமை இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கும் ஏற்படுமா?

தொடர்ச்சி▲

காரத்தை எதிரெதிர் துருவ நிலையில் இருந்து அணுகாமல், உட்கட்சிக்கு உள்ளேயே முரண்பாடுகளைக் களைந்து, பிரச்சினையைத் தீர்த்திருக்க வேண்டியதே ஆற்றலாளர்களினுடைய உயர்நிலை நிர்வாகப் பணியாக இருந்திருக்க வேண்டும். அதை விடுத்து, ஒரே கட்சிக்குள் எதிர்வாதம் புரிவது என்பது பொதுவெளி ஜனநாயகம் எனக் காண்பித்தாலும், தென்கிழக்கு ஆசிய நாடுகளில் பன்மைத்துவ ஜனநாயகமோ உள்கட்சி ஜனநாயகமோ எங்கும் காணப்படுவதில்லை. அவ்வாறான ஒருநிலைக்குட்படுத்தப்பட்ட நிர்வாகக் கட்டமைப்பு உள்ள நாடுகளில் இவ்விதமான எதிரெதிர் நிலை அரசியல் விடயங்களை கையாள்வது என்பதில் அதிகூடிய பக்குவமும் கவனமும் நிதானமும் நிறைந்து காணப்பட வேண்டும்.

அதை இன்றைய தமிழரசுக் கட்சியிடம் எதிர்பார்க்க முடியுமா என்பதுதான் மில்லியன் டொலர் கேள்வி.

இந்த உள்கட்சி முரண்பாடுகளை நிதானம் இல்லாமல் கையாண்டதன் விளைவுதான் கடந்த காலத்தில் பலர் வெளியேறினார்கள். கட்சிக் கட்டுப்பாட்டு விடயத்தில் தங்களை ஜெயலலிதா போல் காண்பிக்க முற்படுவது பரிதாபத்துக்குரிய விடயமாகும். ஏனெனில் இவர்கள் எவரும் உத்தமர்கள் இல்லை. இந்த நிலை தொடருமாக இருந்தால் கட்சி இரண்டுபடுவதைத் தவிர வேறு வழி இல்லை. அவ்வாறு பிளவு படுமாக இருப்பின் பிரதான தமிழரசுக் கட்சி என இன்றைக்கு கூறுபவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைக்கு வரலாம். அல்லது தமிழர் விடுதலைக் கூட்டணியின் நிலை ஏற்படலாம். இந்த ஆபத்தான களச் சூழலை அறிவார்த்தமாக அணுகத் தவறினால் பாதிக்கப்படப் போவது தமிழினம் என்பதனை இவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். உணர்ந்து கொள்வார்களா என்பது மிகப்பெரிய கேள்வி. ஏனெனில் இவர்கள் கடந்த காலத்தில் இழக்கவும் இல்லை. இனியும் இழப்பதற்கு எதுவுமில்லை. ஆகவே இவர்களிடத்தில் அற உணர்வை எதிர்பார்க்க முடியுமா என்னும் சாமானிய கேள்வி எழுகிறது.

எதிரியும் துரோகியும் பலமடையட்டும் எனும் மறைமுக நிகழ்ச்சி நிரலோடு தான் உள்கட்சி விவகாரங்களில் இவர்கள் ஈடுபடுகிறார்களோ என்கின்ற சந்தேகமும் இப்பொழுது எழுகிறது. கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் மட்டக்களப்பு தவிர்ந்த ஏனைய வடக்கு கிழக்கு அனைத்து தேர்தல் மாவட்டத்திலும் அரசு அதிகளவான வாக்குகளை பெற்றதற்கு பின்னரும் கூட தங்கள் தவறுகளை மீளாய்வு செய்து கொள்ளாமல் – செயல்பாடுகளில் மாற்றத்தை ஏற்படுத்தாமல் –.தொடர்ந்து பயணிக்கிறார்கள் என்றால் இனமான உணர்வு என்கின்ற ஒன்றைப் பற்றி இவர்கள் எந்தத் தளத்திலும் சிந்திப்பதில்லை என்றே தோன்றுகிறது. காலக் கண்ணாடி அனைவரையும் காட்சிப்படுத்திக் கொண்டே இருக்கிறது என்பதனை இவர்கள் மறந்து விடுகிறார்கள். தொடர்ந்து மக்களுக்கு மாற்றுத் தெரிவு இல்லாமல் இவர்களைத்தான் தெரிவு செய்வார்கள் என்கின்ற நப்பாசை கடந்த தேர்தலில் கானல் நீர் ஆகியது. இதே நிலைமை தொடருமாக இருப்பின் வடக்கு மாகாண சபை தேர்தல் நடைபெற்றால் மக்கள் சம்மட்டி அடி கொடுப்பார்கள். மக்கள் மன்றத்தில் தொடர்ந்து விலகிச் செல்வதையே காணக் கூடியதாக இருக்கிறது. அரசு தனது கட்சி உறுப்பினர்களைக் கொண்டு பிரஜா சக்தி போன்ற அமைப்புகளை உருவாக்கி, தமிழ்த் தேசிய அரசியலை சிதைக்கும் நிலைப்பாட்டை தோற்றுவிக்க முனைகின்ற சூழலை வலிமையாக எதிர்க்க வேண்டிய தமிழ் மக்களின் பிரதான கட்சி அமைதியாக இருப்பது சந்தேகத்தை ஏற்படுத்துகிறது.

கொள்கை இல்லாமல் அணி சேர்த்து, பதவி பகிர முனையும் பிற்போக்குத்தனமான செயற்பாடுகளை மக்கள் இரசிக்கவில்லை. அவர்கள் இரசிக்காத வரையில் நீங்கள் வாக்கை ருசிக்க முடியாது. உணர்ச்சி வச பேச்சுக்களும் உரிமை குரல் என்கின்ற வெற்று கோஷங்களும் காலாவதியாகி காற்றில் வீசப்பட்டுள்ளன.

என்பதனை இன்னும் புரியாமல் இருப்பது அறியாமையின் வெளிப்பாடு. உங்கள் தெருச்சண்டைக்கு விரைவில் முடிவு காணாவிட்டால் காலச்சக்கரம் உங்களை காணாமல் போக வைக்கும் என்பதனை நீங்கள் உணரும் காலம் வெகு தொலைவில் இல்லை.

அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும். காலம் எவரையும் விதிவிலக்குட்படுத்துவதில்லை என்பதனை பட்டறிவு அனுபவத்திலிருந்து உணர்ந்து கொள்ளாவிட்டால் அதை விட முட்டாள்தனம் வேறு ஒன்றும் இல்லை.






# வடக்கு, கிழக்குக்கு அதிகாரமளிப்பது பொருளாதார மீட்சிக்கு வழி செய்யும்



**- ராஜ் சிவநாதன் -**

2026ஆம் ஆண்டில் இலங்கை பொருளாதார பலவீனம் மற்றும் புவிசார் அரசியல் அழுத்தங்களும் மத்தியில் சிக்கி நிற்கிறது. உலக பொருளாதாரம் இன்னும் நிலைபெறாத நிலையில் உள்ளது.

உயர்ந்த வட்டி விகிதங்கள், வர்த்தக மந்தம், உடைந்த விநியோக சங்கிலிகள் மற்றும் வல்லரசுகளுக் கிடையேயான கடும் போட்டி ஆகியவை இந்த நெருக் கடிகளை வடிவமைக்கின்றன.

இந்தச் சூழலில், தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஒரு சாதாரண நிதி நெருக்கடியை அல்ல, பல தசாப் தங்களாக சிதைந்த பொருளாதார இறையாண்மையுடன் கூடிய ஒரு பலவீனமான அரசை மரபாகப் பெற்றுள்ளது.

இன்றைய முக்கிய கேள்வி, இலங்கை தற்காலிகமாக நிலைநிறுத்தப்படுமா என்பதல்ல. பொருளாதார பலவீனத்தை நீண்டகால புவிசார் அடிமைத்தனமாக மாற்றாமல் தடுக்க முடியுமா என்பதே.

### IMF தலைமையில் நிலைத்தன்மை ஆனால் கட்டமைப்பு மாற்றமில்லை

தேசிய மக்கள் சக்தி அரசின் பொருளாதார நிர்வாகம் சர்வதேச நாணய நிதியத்தின் கட்டமைப்புக்குள் அடங் கியுள்ளது. பணவீக்கம் குறைந்துள்ளது, கையிருப்புகள் சற்று உயர்ந்துள்ளன, இறக்குமதிகள் நிலை பெற்றுள்ளன. ஆனால் இந்த நிலைத்தன்மை நிபந்த னைகளுடனும் வெளிநாட்டு அழுத்தத்துடனும்தான் உருவானது என்பதைப் புறமொதுக்கி விட முடியாது.

அதிக வரிகள், அரச செலவுக் குறைப்பு மற்றும் நலத்திட்டக் கட்டுப்பாடுகள் மூலமே இந்த நிலை கிடைத்துள்ளது. இது கடனளிப்பவர்களை திருப்திப்படுத் தலாம். ஆனால் இது பொருளாதார மீட்பல்ல. இது இணங்கிப் போகும் ஒரு செயற்பாடு மட்டுமே.

### சீனா, இந்தியா இரண்டுக்குமிடையே பலவீன நிலையில் சமநிலையாக்கம்

இலங்கை சீனாவையும் இந்தியாவையும் சமநிலைப் படுத்த வேண்டிய கட்டாயத்தில் உள்ளது. சீனா இலங் கையின் மிகப்பெரிய இருதரப்பு கடனளிப்பாளராக இருந்தாலும், தற்போது கடன் மறுசீரமைப்பு மற்றும் நீண்டகால மூலோபாய நிலைப்பாடுகளையே விரும்புகிறது.

இந்தியா குறுகிய காலத்தில் எரிபொருள், கடன் வரிசைகள் மற்றும் நாணய மாற்றங்கள் மூலம் முக்கிய ஆதரவாளராக உள்ளது. ஆனால் இதுவும் மூலோபாயக் கணக்குகளோடு இணைந்ததே.

### திருகோணமலைத் துறைமுகத்தை ஒட்டிய இந்தியப் பெருங்கடல் புவிசார் வெளிப்பாடு

திருகோணமலை உலகின் ஆழமான இயற்கை துறைமுகங்களில் ஒன்றாகும். இது முக்கிய கடல்வழிப் பாதைகளுக்கு அருகிலுள்ளது. பொருளாதார பலவீனம் அதிகரிக்கும் போது, துறைமுகங்கள் மற்றும் போக்குவரத்து மையங்கள் நீண்டகால குத்தகைகளுக்கும் பாதுகாப்பு சார்ந்த ஒப்பந்தங்களுக்கும் உட்பட வாய்ப்பு அதிகரிக்கிறது.

### அமெரிக்கா - சீனா போட்டியும் நடுநிலையும்

அமெரிக்கா மற்றும் சீனாவுக்கிடையேயான போட்டி இந்தியப் பெருங்கடலை முழுமையாக மாற்றியுள்ளது. பொருளாதார அடிமைத்தனம் அதிகாரப்பூர்வ இராணுவ ஒப்பந்தங்களின்றியே மூலோபாயச் சார்பாக மாறக்கூடும்.

### பகிரப்பட்ட அதிகாரம் ஒரு பொருளாதாரத் தீர்வு

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் துறைமுகங்கள், விமான நிலையங்கள், மீன்பிடி, புதுப்பிக்கத்தக்க ஆற் றல் மற்றும் சுற்றுலா போன்ற தேசிய முக்கியத்துவம் வாய்ந்த வளங்கள் உள்ளன. கட்டமைப்பு திட்டங்கள் மற்றும் முதலீட்டு அனுமதிகளில் உண்மையான அதிகாரம் வழங்கப்பட்டால், இப்பகுதிகள் நாட்டின் வளர்ச்சி இயந்திரங்களாக மாறக்கூடும்.

### துறைமுகங்கள், விமான நிலையங்கள் கடனிலிருந்து மீளும் வாய்ப்பைத் தரும்

இலங்கையின் கடன் நெருக்கடி அடிப்படையில் வருமான நெருக்கடியே. துறைமுக மற்றும் விமான நிலைய வளர்ச்சியை வேகப்படுத்தும் மண்டல நிர்வாகம் வெளிநாட்டு நாணய வருவாயை உயர்த்தும். கடனி லிருந்து மீளும் வாய்ப்பைத் தரும்.

### முடிவுரை

இறையாண்மை ஒரு முழக்கம் அல்ல. அது வெளி நாட்டு அழுத்தங்களுக்கு அடிபணியாமல் தேசிய செல்வத்தை உருவாக்கும் திறன். வடக்கு, கிழக்கை அதிகாரமளிப்பது ஓர் அரசியல் சலுகை அல்ல. அது இலங்கையின் பொருளாதார எதிர்காலத்திற்கான அவசியம்.

வரலாறு இந்த அரசாங்கம் எந்த பாதையைத் தேர்ந்தெடுத்தது என்பதை மதிப்பிடும்.





# 6 ஆம் திகதி வெளியான பயங்கரவாதப் பெயர் பட்டியலில் ‘சுப்பர் முஸ்லிம்’ தலைவர் டாக்டர் கே.எல்.எம். ரயீஸும்!

**(பாறுக் ஷிஹான்)**

பாதுகாப்பு அமைச்சின் செயலாளரினால் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைய அம்பாறை மாவட்டம் கல்முனை பகுதியை சேர்ந்த சுப்பர் முஸ்லிம் அமைப்பின் தலைவர் டாக்டர் கே.எல்.எம். ரயீஸ் என்பவரது பெயரும் இடம்பெற்றுள்ளது.

2026 ஆண்டு ஜனவரி 06ஆம் திகதி வெளியிடப்பட்ட பயங்கரவாதத்துடன் தொடர்புடைய நபர்கள் மற்றும் அமைப்புகளின் திருத்தப்பட்ட பட்டியல் அடங்கிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

1968 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க ஐக்கிய நாடுகள் சட்டத்தின் கீழ் பெயரிடப்பட்ட நபர்கள் குழுக்கள் மற்றும் அமைப்புகளின் திருத்தப்பட்ட பட்டியல் அதிவிசேட வர்த்தமானி மூலம் வெளியிடப்பட்டுள்ளது.

இதே வேளை இலங்கையில் 2021.04.13 ஜனாதிபதியாக கோட்டாபய ராஜபக்ஷ இருந்த போது 11 இஸ்லாமிய அமைப்புக்களைத் தடை செய்வது தொடர்பிலான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டிருந்தது.

இதற்கமைய பின்வரும் அமைப்புக்களுக்கு தடை விதிக்கப்பட்டிருந்தன.

1. ஐக்கிய தௌஹீத் (தௌஹீத்) ஜமாஅத் (UTJ)
2. சிலோன் தௌஹீத் (தௌஹீத்) ஜமாஅத் (CTJ)
3. ஸ்ரீலங்கா தௌஹீத் (தௌஹீத்) ஜமாஅத் (ளுடுவுது)
4. அகில இலங்கை தௌஹீத் (தௌஹீத்) ஜமாஅத் (ACTJ)
5. ஜம்மியதுல் அன்ஸாரி சுன்னதுல் மொஹமதியா (துயுளுஆ).மறுபெயர் ஜம்மாஅத் அன்ஸாரிஸ் சுன்னதில் மொஹமதியா ஒழுங்கமைப்பு. மறுபெயர் அகில இலங்கை ஜம் – ஈ – அது அன்ஸாரிஸ் சுன்னதில் மொஹம்மதியா. மறுபெயர் அன்ஸாரிஸ் சுன்னதில் மொஹம்மதியா கழகம். மறுபெயர் ஜமாஅத் அன்ஸாரிஸ் சுன்னதில் மொஹம்மதியா.
6. தாறுல் அதர். மறுபெயர் ஜாமிஉல் அதர் பள்ளிவாசல். மறுபெயர் தாறுல் அதர் குரான் மத்ரச. மறுபெயர் தாறுல் அதர்அத்தபாவிய்யா.
7. ஸ்ரீலங்கா இஸ்லாமிய மாணவர் இயக்கம் (SLISM). மறுபெயர் ஜம்இய்யா.
8. ஈராக் மற்றும் சிரியா இஸ்லாமிய அரசு (ISIS). மறுபெயர் அல் – தௌலா அல் – இஸ்லாமியா தௌலா இஸ்லாமியா.
9. அல்கய்தா அமைப்பு
10. சேவ் த பேர்ள்ஸ் அமைப்பு. மறுபெயர் சேவ் த பேர்ள் சங்கம்
11. சுப்பர் முஸ்லிம் அமைப்பு.



ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

பகுதி I : தொகுதி (I) - பொது

அரசாங்க அறிவித்தல்கள்
















# பதுளை மாவட்டத்தில் மண்சரிவு அபாயமுள்ள இடங்களுக்குப் பதிலாக சிறுநகர செயற்றிட்டம்

பதுளை மாவட்டத்தில் மண்சரிவு அபாயமுள்ள பகுதிகளில் வாழும் மக்களுக்காக சிறுநகர செயற்றிட்டம் ஒன்றை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பதுளை மாவட்டத்தில் மண்சரிவு அபாயமுள்ள 68 வீதமான பகுதிகள் இதுவரை அடையாளம் காணப்பட்டுள்ளன என ஊவா மாகாண பிரதம செயலாளர் அனுஷா கோகுல தெரிவித்தார்.

தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகத்தினால் ஊவா மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றில் இந்த விடயம் கண்டறியப்பட்டுள்ளது.

இதற்கமைய சிறுநகர செயற்றிட்டத்தின் கீழ் முதலாவது திட்டத்தை ஸ்பிரிங்வெளி நகரத்தை மையமாகக் கொண்டு முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக ஊவா மாகாண பிரதம செயலாளர் அனுஷா கோகுல தெரிவித்துள்ளார்.

# 55 வீத தனியார் மருந்தகங்கள் மூடப்படுகின்ற அபாயம் நிலை



உரிம சிக்கல்கள் காரணமாக நாட்டில் உள்ள தனியார் மருந்தகங்களில் அரைவாசிக்கும் அதிகமானவை மூடப்பட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாக அகில இலங்கை தனியார் மருந்தக உரிமையாளர்கள் சங்கம் அதிர்ச்சித் தகவலை வெளியிட்டுள்ளது.

நாட்டில் உள்ள மொத்த தனியார் மருந்தகங்களில் சுமார் 55 சதவீதமானவை இந்த உரிம சிக்கல் காரணமாக மூடப்படும் அபாயத்தில் உள்ளன.

இது தொடர்பாக நிலவும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுமாறு சுகாதார அமைச்சின் அதிகாரிகளிடம் பல முறை கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சரிடமிருந்து முறையான தீர்வுகளை எதிர்பார்த்துப் பல கோரிக்கைகளை விடுத்தும், இதுவரை எந்தவொரு சாதகமான பதிலோ அல்லது நிவாரணமோ கிடைக்கவில்லை என சங்கத்தின் தலைவர் சந்திக கங்கந்த அதிருப்தி வெளியிட்டுள்ளார்.







# முன்பள்ளிக் கல்வி முறையில் ஏற்படும் அதிரடி மாற்றங்கள்

## பிரதமர் ஹரிணி அமரசூரிய தகவல்

இலங்கையில் முன்பள்ளிக் கல்வி முறையை ஒன்றிணைத்து, அதனை ஒரு தேசியக் கட்டமைப்பின் கீழ் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் ஆரம்பித்துள்ளதாக பிரதமர் ஹறிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

அலரி மாளிகையில் நேற்று நடைபெற்ற "சிறுவர் சுகாதார மேம்பாட்டிற்கான தேசிய தொடர்பாடல் நிகழ்ச்சித் திட்டத்தின்" அங்குரார்ப்பண விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஒரு குழந்தையின் எதிர்காலம் மற்றும் நாட்டின் நீண்டகால மனிதவள மேம்பாடு ஆகியவற்றில் ஆரம்பகால பிள்ளைப் பருவ அபிவிருத்தி தீர்மானமிக்க தாக்கத்தை ஏற்படுத்துவதாக அவர் குறிப்பிட்டார்.

ஆரம்பகால பிள்ளைப் பருவ அபிவிருத்தி என்பது பெற்றோரின் தனிப்பட்ட பொறுப்பு மாத்திரமல்ல, அது ஒட்டுமொத்த சமூகத்தின் கூட்டுப் பொறுப்பாகும் என அவர் வலியுறுத்தினார்.

ஆரம்பகால பிள்ளைப் பருவ அபிவிருத்தியை கல்வித்துறையின் ஒரு விசேட பிரிவாக அங்கீகரித்து, யுனிசெப் நிறுவனத்தின் தொழில்நுட்ப உதவியுடன் புதிய கல்விக் கொள்கை உருவாக்கப்பட்டுள்ளதாகவும் பிரதமர் தெரிவித்துள்ளார்.









# 12ஆம் திகதி கல்வி அமைச்சுக்கு முன்பாக தொடர்ச்சியாக சத்தியாகிரகப் போராட்டம்

## தயாராகிறார் விமல் வீரவன்ச




புதிய கல்விச் சீர்திருத்தங்களை உடனடியாக மீளப்பெற வலியுறுத்தியும், அதற்குப் பொறுப்பேற்று கல்வி அமைச்சர் பதவி விலக வேண்டும் என கோரியும், எதிர்வரும் 12ஆம் திகதி திங்கள் கிழமை முதல் கல்வி அமைச்சுக்கும் முன்னால் தொடர் சத்தியாக்கிரகப் போராட்டத்தை முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளதாக முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“புதிய கல்விச் சீர்திருத்தங்கள் என்ற பெயரில் பிள்ளைகளின் எதிர்காலத்தைச் சீரழிக்கும் வேலைத்திட்டமே தற்போது முன்னெடுக்கப்படுகிறது.

இந்தச் சீர்திருத்தங்களுக்கான பாடநெறித் தொகுப்புகளில், ஆபாச இணையதளங்கள் மற்றும் ஆபாச யூடியூப் சேனல்களுக்கான இணைப்புகள் உள்ளடக்கப்பட்டுள்ளமை மிகவும் அதிர்ச்சியளிக்கிறது.

இது தொழில்நுட்பக் கருவிகளின் பயன்பாட்டை அதிகரித்து, அதன் மூலம் பணம் சம்பாதிக்கும் ஒரு பாரிய வர்த்தகச் சதி.

பாடநெறி தொகுப்பில் இவ்வாறான இணையதளங்களைச் சேர்ப்பதன் மூலம், லட்சக்கணக்கான மாணவர்கள் அவற்றை அணுக நேரிடும்.

இதன் மூலம் ஈட்டப்படும் பாரிய அளவிலான பணம் யாருடைய கைகளுக்குச் செல்கிறது என்பது குறித்து முறையான விசாரணை நடத்தப்பட வேண்டும்.

எந்தவொரு கல்விச் சீர்திருத்தமும் நிபுணர்களின் ஆலோசனையுடனும், முன்னோடித் திட்டங்கள் ஊடாகவும் மிகவும் அவதானமாகவே முன்னெடுக்கப்பட வேண்டும்.

ஆனால், எவ்வித கலந்துரையாடல்களும் இன்றி அவசர கதியில் இந்த சீர்திருத்தங்கள் திணிக்கப்படுவதால் இவ்வாறான மன்னிக்க முடியாத தவறுகள் இடம்பெறுகின்றன.

எனவே, தமது பிள்ளைகளின் எதிர்காலத்தைப் பாதுகாப்பதற்காக அனைத்துப் பெற்றோர்களும் எவ்வித பேதமுமின்றி திங்கள் கிழமை காலை 9.00 மணிக்குத் தொடங்கவுள்ள இந்தச் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் இணைய வேண்டும்.

இந்த அழிவுகரமான கல்விச் சீர்திருத்தங்கள் முழுமையாகத் திரும்பப் பெறப்படும் வரை இந்தப் போராட்டம் ஓயாது.” – என்றார்.

# முஸ்லிம் அரச ஊழியர்களுக்கு நெகிழ்வுப்போக்கான பணி நேரம்



புனித ரமழான் மாதத்தில் முஸ்லிம் அரச ஊழியர்கள் தமது மதக் கடமைகளை இலகுவாக நிறைவேற்றும் வகையில், அனைத்து அரச நிறுவனங்களிலும் நெகிழ்வுப்போக்கான பணிநேரத்தை அறிமுகப்படுத்துமாறு பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு உத்தரவிட்டுள்ளது.

இது தொடர்பான விசேட சுற்றறிக்கை அமைச்சின் செயலாளர்கள், மாகாண பிரதம செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச் சட்ட சபைகளின் தலைவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டுக்கான ரமழான் நோன்பு பெப்ரவரி 19ஆம் திகதி முதல் மார்ச் 21ஆம் திகதி வரை அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்தக் காலப்பகுதியில் முஸ்லிம் ஊழியர்கள் நோன்பு நோற்பதற்கும் ஏனைய மத அனுஷ்டானங்களில் ஈடுபடுவதற்கும் ஏதுவாக பணி அட்டவணைகளை மாற்றி அமைக்குமாறு அந்தந்த நிறுவனங்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மதக் கடமைகளுக்காக விசேட விடுமுறைகளை வழங்குவதை விட, பணி நேரங்களைச் சீரமைப்பதன் மூலம் தேவைகளை நிர்வகிக்குமாறு அமைச்சு வலியுறுத்தியுள்ளது.

தவிர்க்க முடியாத சூழ்நிலைகளில் மட்டுமே விசேட விடுமுறைகளை அங்கீகரிக்குமாறு நிறுவனத் தலைவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரச சேவையின் செயற்திறனைப் பாதிக்காத வகையில், ஊழியர்களின் மதச் சுதந்திரத்தை உறுதி செய்வதே இந்த நடவடிக்கையின் நோக்கமாகும் என அந்தச் சுற்றறிக்கையில் மேலும் சுட்



# வெளிநாட்டு வேலைவாய்ப்பு தருவதாக மோசடியில் ஈடுபட்ட 2 பெண்கள் கைது

அரச அதிகாரிகளின் உத்தியோக பூர்வ இறப்பர் முத்திரைகளை பயன்படுத்தி வெளிநாட்டு வேலைவாய்ப்பு மோசடியில் ஈடுபட்ட 2 பெண்கள் பொரலஸ்கமுவ பகுதியில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஜப்பான் மொழி பயிற்சி வழங்கும் நிறுவனமாக நடத்திச் செல்லப்பட்ட நிறுவனமொன்று ஜப்பானில் சாரதி தொழில்வாய்ப்புகள் காணப்படுதாக பேஸ்புக்கில் விளம்பரத்தை பதிவிட்டுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

இந்த நிறுவனத்தை சோதனையிட்ட போது அரச பாடசாலை அதிபர்கள், பிரதேச செயலாளர்கள், உள்நாட்டு இறைவரித் திணைக்கள ஆணையாளர் ஒருவர், பல்கலைக்கழக விரிவுரையாளர் ஒருவர் மற்றும் ஏனைய தனியார் நிறுவனங்களின் உத்தியோகபூர்வ இறப்பர் முத்திரைகள் கண்டுப்பிடிக்கப்பட்டுள்ளன.

அத்துடன், சட்டவிரோதமாக தயாரரிக்கப்பட்ட சாதாரண மற்றும் உயர்தர பரீட்சை பெறுபேறுகள் அடங்கிய அட்டை, கல்வி அமைச்சினால் அதிபர்களுக்கு பிரத்தியேகமாக வழங்கப்பட்ட 100 மாணவர் செயற்றிறன் அறிக்கைகள் அடங்கிய அரசாங்கத்தினால் அச்சிடப்பட்ட இரண்டு புத்தகங்களும் மீட்கப்பட்டன என வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# இலங்கையில் தீவிரமடையும் டெங்கு; 9 நாள்களில் 2,420 நோயாளர்கள் பதிவு



இலங்கையில்தற்போதுடெங்குநோயாளர்களின் எண்ணிக்கையில் சடுதியான அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாகத் தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவின் பிரதி பணிப்பாளர் மருத்துவர் கபில கண்ணங்கர தெரிவித்துள்ளார்.

இதன்படி ஜனவரி முதலாம் திகதி முதல் நேற்று முன்தினம் வரையான 9 நாள்களில் மாத்திரம் நாடு முழுவதும் 2,420 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

இதில் மேல் மாகாணத்தில் அதிகபட்சமாக 1,317 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

மேலும் தென் மாகாணத்தில் 361 டெங்கு நோயாளர்களும், மத்திய மாகாணத்தில் 192 நோயாளர்களும் பதிவாகியுள்ளதுடன் சபரகமுவ மாகாணத்தில் 165 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதற்கமைய அதிகபடியான டெங்கு நோயாளர்கள் கொழும்பு மாவட்டத்திலேயே பதிவாகியுள்ளனர்.

இதன்படி கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் 165 டெங்கு நோயாளிகள் பதிவாகியுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கம்பஹா மாவட்டத்தில் 393 நோயாளிகளும், களுத்துறை மாவட்டத்தில் 128 நோயாளிகளும் பதிவாகியுள்ளனர்.

கூடுதலாக, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களில் கணிசமான எண்ணிக்கையிலான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

அதன்படி, காலி மாவட்டத்தில் 148 டெங்கு நோயாளிகளும், மாத்தறை மாவட்டத்தில் 162 டெங்கு நோயாளிகளும் பதிவாகியுள்ளனர்.

இதே நேரத்தில், கண்டி மாவட்டத்தில் 140 நோயாளிகளும், இரத்தினபுரி மாவட்டத்தில் 113 நோயாளிகளும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இந்தமாவட்டங்களில்கவனம்செலுத்த வேண்டிய அளவில் டெங்கு நோயாளிகள் பதிவாகியுள்ளனர் என சுகாதாரப் பிரிவினர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எதிர்வரும் காலங்களில் மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுவதால், குறித்த விடயத்தில் கவனம் செலுத்த வேண்டும் என சுகாதாரப் பிரிவினர் வலியுறுத்தியுள்ளனர்.

# மக்கள் தொகையுடன் சாதிவாரி கணக்கெடுப்பு; முதல்வர்கள் குழு அமைக்க ஸ்டாலின் கோரிக்கை




தேசியமக்கள்தொகைக்கணக்கெடுப்புடன் சாதிவாரிக் கணக்கெடுப்பையும் சேர்த்து நடத்தத் திட்டமிட்டுள்ள மத்திய அரசின் முடிவை வரவேற்றுள்ள முதல்வர் மு.க.ஸ்டாலின், இதற்காக மாநில முதல்வர்கள் அடங்கிய ஆலோசனைக் குழுவை அமைக்குமாறு பிரதமர் மோடிக்கு கடிதம் எழுதியுள்ளார்.

இதுகுறித்துபிரதமர்நரேந்திரமோடிக்கு அவர் நேற்று எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிடுகையில்,

“தேசியமக்கள்தொகைக்கணக்கெடுப்புடன், சாதி அடிப்படையிலான கணக்கெடுப்பையும் சேர்த்து நடத்தத் திட்டமிட்டுள்ள மத்திய அரசின் முடிவு மூலம் விரிவான, நம்பகமான தரவுகளைப் பெற்று, சமூக ஏற்றத்தாழ்வுகளை நிவர்த்தி செய்யவும், நலத்திட்டங்கள் உரியவர்களுக்கு சென்று சேருவதை உறுதி செய்யவும் இயலும். இது தமிழக அரசின் நீண்டகால கோரிக்கையுடன் ஒருமித்து இருப்பதால், மத்திய அரசின் இந்த நடவடிக்கையை வரவேற்கிறோம்.

மேலும், மக்கள்தொகைக் கணக்கெடுப்புடன், சாதிவாரிக் கணக்கெடுப்பையும் சேர்த்து நடத்த மத்திய அரசை வலியுறுத்தும் தீர்மானங்கள் ஏற்கெனவே தமிழக சட்டப்பேரவையில் நிறைவேற்றி, இந்தக் கோரிக்கையில் தமிழகம் முன்னோடியாக உள்ளது. இதுதவிர, மத்திய அரசின் இந்த முடிவானது, ஆதாரங்களின் அடிப்படையிலான சமூக நீதிக்கான தமிழகத்தின் நிலைப்பாட்டை உறுதி செய்வதாகவும் உள்ளது.

இருப்பினும், சாதிவாரிக் கணக்கெடுப்பு என்பது ஆழமாக வேரூன்றிய சமூக இயக்கவியல், பல்வேறு மாநிலங்களில் சாதிய கட்டமைப்புகளிலுள்ள வேறுபாடுகள் போன்றவற்றைக் கருத்தில் கொண்டு மிகுந்த கவனத்துடன் கையாளப்படாவிட்டால், எதிர்பாராத சமூகப் பதட்டங்களுக்கான சாத்தியக்கூறுகளை ஏற்படுத்தக்கூடிய உணர்வுப்பூர்வமான விஷயமாக உள்ளது.

எனவே, இக்கணக்கெடுப்பினை மேற்கொள்வதற்கான கேள்விகள், பிரிவுகள், துணைப்பிரிவுகள் மற்றும் தரவு சேகரிப்பு வழிமுறைகள் துல்லியமாகவும், தெளிவானதாகவும் இருக்கும் பட்சத்தில் மட்டுமே, பொது நம்பிக்கையை உறுதி செய்ய முடியும். இல்லாவிட்டால், இந்த அம்சங்களில் ஏதேனும் குறைபாடுகள், சர்ச்சைகள், துல்லியமின்மை அல்லது பிளவுபட்ட கருத்துக்களை அதிகரிக்கக்கூடும்.

மக்கள் தொகை கணக்கெடுப்பு மத்திய அரசின் பட்டியலில் இருந்தாலும், அதன் முடிவுகள் கல்வி, வேலைவாய்ப்பு, இடஒதுக்கீடு மற்றும் நலத்திட்டங்கள் குறித்த மாநில அளவிலான கொள்கைகளை ஆழமாகப் பாதிக்கும்.

எனவே, சாதிவாரிக் கணக்கெடுப்புக்கானவழிகாட்டுதல்கள்குறித்துவிவாதித்து மேம்படுத்த மாநில முதல்வர்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் பிரதிநிதிகள் அடங்கிய ஆலோசனைக் குழுவை உருவாக்க வேண்டும். இப்பணி தொடர்பான செயல்முறையின் உணர்திறனைப் பாதுகாக்கவும், சமூக நீதியை மேம்படுத்துவதற்கான தரவுகளின் நம்பகத்தன்மையை உறுதி செய்யவும், தேவைப்படும் இடங்களில் முன்னோடி சோதனை உட்பட, கட்டமைப்பை வடிவமைப்பதில் மிகுந்த கவனமுடன் செயல்பட வேண்டும்.

தங்களின்கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ள இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க நடவடிக்கை, சமத்துவம் மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய இந்தியாவின் உறுதிப்பாட்டை வலுப்படுத்தவும், கூட்டாட்சிக் கொள்கைகளை நிலைநிறுத்தவும் பயன்படுத்தப்படும் என்று நான் நம்புகிறேன்.” என்று குறிப்பிட்டுள்ளார்.

# அயோத்தியை அண்மித்து அசைவ உணவுக்குத் தடை



அயோத்தியின் 15 கிலோ மீற்றர் சுற்றளவில் அசைவ உணவு விநியோகிக்க தடை செய்யப்பட்டுள்ளது. ஒன்லைனில் மது உள்ளிட்டவை வழங்கும் புகாரால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

உத்தரப் பிரதேசம் மாநிலம் அயோத்தியில் ராமர் கோயில் புதிதாகக் கட்டப்பட்டது. இக்கோயிலை சுற்றியுள்ள சுமார் 15 கிலோ மீற்றர் பகுதி ‘பஞ்சகோசி பரிக்ரமா’ என அழைக்கப்படுகிறது.

அயோத்தி மற்றும் ஃபைசாபாத்தை இணைக்கும் 14 கிலோ மீற்றர் நீளத்தில் ராமர் புனிதப் பாதை அமைந்துள்ளது. இப்பகுதியில் மதுபானம் மற்றும் இறைச்சி விற்பனைக்குத் தடை விதித்து அயோத்தி மாநகராட்சி மே 2025 இல் அறிவித்திருந்தது.

எனினும், அங்குள்ளவர்கள் ஒன்லைன் உணவு விநியோகத் தளங்களில் அசைவப் பொருள்களை வாங்கிப் பயன்படுத்துகின்றனர். இதன் மீது அயோத்தி மாவட்ட நிர்வாகத்துக்கு மீண்டும் மீண்டும் புகார்கள் வந்தவண்ணம் உள்ளன.

புனித நகரமான அயோத்தியின் சில ஹோட்டல்கள் மற்றும் தங்கும் விடுதிகள் விருந்தினர்களுக்கு அசைவ உணவு மற்றும் மதுபானங்களை வழங்கி வருவதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

மாநகராட்சி அறிவிப்பிற்கு பின்பும், கடந்த ஒன்பது மாதங்களாக மதுபான விற்பனைக்கான தடை பெரிய அளவில் அமுல்படுத்தப்படவில்லை எனப் புகார்கள் உள்ளன. ராமர் புனிதப் பாதையில் இருபதுக்கும் மேற்பட்ட கடைகளில் மதுபானம் விற்கப்படுவதாகவும் உள்ளூர்வாசிகள் புகார் கூறுகின்றனர்.

இது குறித்து அயோத்தி மாநகராட்சியின் உதவி உணவு ஆணையர் மாணிக் சந்திர சிங் கூறுகையில்,

“தடை இருந்தபோதிலும், ஒன்லைன் தளங்கள்மூலம்சுற்றுலாப்பயணிகளுக்கு அசைவ உணவுப் பொருள்கள் தொடர்ந்து விநியோகிக்கப்படுவதாகப் புகார்கள் வந்துள்ளன.

புகார்களைத் தொடர்ந்து, ஒன்லைன் அசைவ உணவு விநியோகத்திற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. அனைத்து ஹோட்டல்கள், கடைக்காரர்கள் மற்றும் விநியோக நிறுவனங்களுக்கு இது குறித்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இது கடைப்பிடிக்கப்படுவதை உறுதிசெய்யத் தொடர் கண்காணிப்பு மேற்கொள்ளப்படும்.” எனத் தெரிவித்துள்ளார்.

# ட்ரம்பிடம் தொலைபேசியில் பேச மோடி மறுத்தமையால் இந்தியா - அமெரிக்கா வர்த்தக ஒப்பந்தம் முடக்கம்

## அமெரிக்க அமைச்சர் ஹோவர்ட் லுட்னிக் தகவல்



ட்ரம்பிடம் தொலைபேசியில் உரையாட மோடி மறுத்ததால் இந்தியா மற்றும் அமெரிக்கா இடையிலான வர்த்தக ஒப்பந்தம் முடங்கியுள்ளதாக அமெரிக்க வர்த்தக அமைச்சர் ஹோவர்ட் லுட்னிக் தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவிடம் இருந்து இந்தியா கச்சா எண்ணெய்வாங்குவதால்இந்தியபொருட்களுக்கு அமெரிக்க அரசு 50 சதவீத வரியை விதித்து வருகிறது.

வரி விதிப்பு தொடர்பாக இருநாடுகளின் மூத்த அதிகாரிகள் பல்வேறு சுற்று பேச்சுவார்த்தைகளை நடத்தினர். இது குறித்து அமெரிக்க வர்த்தக அமைச்சர் ஹோவர்ட் லுட்னிக் கருத்து தெரிவிக்கையில்,

“இந்தியா, அமெரிக்கா இடையிலான வர்த்தக ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டுவிட்டது. வர்த்தக ஒப்பந்தம் தொடர்பாக ஜனாதிபதி ட்ரம்பை, பிரதமர் மோடி தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசுமாறு அறிவுறுத்தினேன். ஆனால் எனது கோரிக்கையை இந்திய குழுவினர் ஏற்கவில்லை. ஜனாதிபதி ட்ரம்பிடம், இந்திய பிரதமர் நரேந்திர மோடி போனில் பேச மறுத்ததால் இரு நாடுகள் இடையிலான வர்த்தக ஒப்பந்தம் முடங்கியிருக்கிறது.

எனினும் இந்தோனேசியா, பிலிப்பைன்ஸ், வியட்நாம், மலேசியா உள்ளிட்ட நாடுகளின் தலைவர்கள் ஜனாதிபதி ட்ரம்பை தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினர். அந்த நாடுகளுடன் வர்த்தக ஒப்பந்தம் அதிகாரப்பூர்வமாக கையெழுத்தாகிவிட்டது.

மூன்று வாரங்களுக்கு பிறகு இந்திய அதிகாரிகள் என்னை தொடர்பு கொண்டனர். அப்போது 3 வாரங்களுக்கு முன்பே ரயில் புறப்பட்டு சென்றுவிட்டது. இனிமேல் என்னால் ஒன்றும் செய்ய முடியாது என்று தெளிவாக கூறிவிட்டேன். இதே பிரச்சினையின் போது பிரிட்டன் பிரதமர் கெய்ர் ஸ்டார்மர், ஜனாதிபதி ட்ரம்பை தொடர்பு கொண்டு ஒப்பந்தத்தை இறுதி செய்துவிட்டார்.” என்று தெரிவித்துள்ளார்.

# புடினை கைது செய்ய அவசியம் இல்லை அவருடன் ஒரு சிறந்த உறவு இருக்கிறது

## ட்ரம்ப் தெரிவிப்பு



வெனிசுலா ஜனாதிபதி நிகோலஸ் மதுரோ கைது செய்யப்பட்டது போல ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் கைது செய்யப்படுவாரா என்ற கேள்விக்கு, அதற்கான அவசியம் இல்லை என டொனால்ட் ட்ரம்ப் பதில் அளித்துள்ளார்.

அமெரிக்காவுக்கு போதைப் பொருள்களை தொடர்ந்து கடத்துவதாக குற்றம் சாட்டி, வெனிசுலா ஜனாதிபதி நிகோலஸ் மதுரோ கடந்த வாரம் சனிக்கிழமை அமெரிக்க பாதுகாப்புப் படையினரால் அவரது மாளிகையில் இருந்து கைது செய்யப்பட்டார். உலகம் முழுவதும் இது பரபரப்பை ஏற்படுத்தியது. அதேநேரத்தில், இந்த அதிரடி நடவடிக்கை, உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கிக்கு அமெரிக்கா மீதான நம்பிக்கையை அதிகரிக்கச் செய்தது.

மதுரோ கைது செய்யப்பட்டது குறித்த கேள்விக்கு பதில் அளித்த ஜெலன்ஸ்கி,

“ஒரு சர்வாதிகாரி இப்படித்தான் நடத்தப்பட வேண்டும் என்றால், அடுத்து என்ன செய்ய வேண்டும் என்று அமெரிக்காவுக்குத் தெரியும்.” என கூறி இருந்தார்.

ரஷ்ய ஜனாதிபதிக்கு எதிராகவும் அமெரிக்கா இத்தகைய நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்ற தனது எதிர்பார்ப்பை அவர் வெளிப்படுத்தி உள்ளார் என செய்திகள் வெளியாகின.

இந்நிலையில், ஜெலன்ஸ்கியின் இந்தக் கருத்தைக் குறிப்பிட்டு டொனால்ட் ட்ரம்ப்பிடம் கேள்வி எழுப்பிய செய்தியாளர் ஒருவர், ‘நிகோலஸ் மதுரோவை போல புடினுக்கு எதிராகவும் அமெரிக்கா நடவடிக்கை எடுக்குமா?’ என்றார்.

இதற்கு மிகவும் இயல்பாக பதில் அளித்த ட்ரம்ப், “அது அவசியமாக இருக்கும் என்று நான் நினைக்கவில்லை. எங்களுக்கும் அவருக்கும் ஒரு சிறந்த உறவு இருக்கிறது. எப்போதுமே இருக்கிறது.” என தெரிவித்தார்.

முன்னதாக, எண்ணெய் மற்றும் எரிவாயு தொடர்பான உயர்மட்ட நிர்வாகிகள் மத்தியில் உரையாற்றிய ட்ரம்ப்,

“ரஷ்யா – உக்ரைன் மோதல் முடிவுக்கு வராதது ஏமாற்றம் அளிக்கிறது. நான் மிகவும் ஏமாற்றம் அடைந்துள்ளேன். நான் எட்டு போர்களை முடிவுக்குக் கொண்டு வந்தேன். இந்த போரை எளிதாக நிறுத்திவிட முடியும் என்று நான் நினைத்தேன்.

இந்த மோதலால் கடந்த மாதம் 31,000 பேர் உயிரிழந்தனர். அவர்களில் பலர் ரஷ்ய இராணுவத்தைச் சேர்ந்தவர்கள். ரஷ்ய பொருளாதாரம் மோசமான நிலையில் உள்ளது. எனினும், நிச்சயம் இந்த போரை முடிவுக்குக் கொண்டுவருவோம் என நினைக்கிறேன். இதை முன்பே முடிக்க முடிந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும். ஏனெனில், நிறைய வீரர்கள் இறந்து கொண்டிருக்கிறார்கள்.” என தெரிவித்தார்.

# உக்ரைன் மீது ரஷ்யா நடத்திய கடும் தாக்குதலில் 4 பேர் பலி



உக்ரைன் மீது ரஷ்யா நடத்திய கடும் தாக்குதலில் 4 பேர் உயிரிழந்துள்ளனர்.

ரஷ்யாவும் உக்ரைனும் 2022 பெப்ரவரி முதல் போரிட்டு வருகின்றன. இதில் ஏராளமானோர் உயிரிழந்தனர். இந்நிலையில் உக்ரைன் மீது ரஷ்யா கடந்த வியாழக் கிழமை இரவு கடும் தாக்குதல் நடத்தியது.

இதுகுறித்து உக்ரைன் அதிகாரிகள் நேற்று கூறுகையில், “36 ஏவுகணைகள், 242 டிரோன்களை பயன்படுத்தி இந்த தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் கீவ் நகரில் 4 பேர் இறந்தனர். 22 பேர் காயம் அடைந்தனர்.” என்றனர்.

இந்த தாக்குதலுக்கு உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி கண்டனம் தெரிவித்துள்ளார்.

# இன்றைய ராசி பலன்கள்- 11.01.2026




இன்று நல்ல மாற்றங்கள் ஏற்படும். வருகின்ற வாய்ப்புகளை முறையாக பயன்படுத்துவதன் மூலம் நீங்கள் பல நன்மைகளைப் பெறலாம்.

பணி மாற்றம் மற்றும் பணி சம்பந்தமான பயணம் நேரலாம். உங்கள் முயற்சிக்கு பாராட்டு கிடைக்கலாம்.

உங்கள் இனிமையான வார்த்தைகளால் உங்கள் துணையை மகிழ்ச்சியுறச் செய்வீர்கள். உங்களின் உரையாடும் விதம் காரணமாக நல்ல சூழல் உருவாகும்.

நிதிநிலைமையைப் பொறுத்தவரை பலன்கள் கலந்து காணப்படும். வரவு செலவு இரண்டும் கலந்து காணப்படும். உங்கள் பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.




ஒழுக்கமான வாழ்வு உங்களுக்கு வெற்றியை பெற்றுத் தரும். உங்கள் தன்னம்பிக்கை நிலை உயர்ந்து காணப்படும். நல்ல உறுதி காணப்படும்.

உங்கள் கடின உழைப்பிற்கு பதவி உயர்வு கிடைக்கும். முறையாக திட்டமிடுவதன் மூலம் வெற்றி கிட்டும். உங்கள் தொழிலில் சுறுசுறுப்பு காணப்படும்.

உங்கள் துணையுடனான அணுகுமுறையில் நேர்மை காணப்படும். இதன் மூலம் ஆரோக்கியமான உறவு காணப்படும்.

இன்று சுதந்திரமான நிதிநிலைமை காணப்படும். சேமிப்பும் உயரும். பயனுள்ள புதிய முதலீட்டிற்கு உகந்த நேரம்.

இன்று உங்கள் ஆற்றலும் உறுதியும் அதிகரித்து காணப்படும். ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்றைய நாள் உங்களுக்கு சாதகமான நாள். கடினமான பணிகளைக் கூட இன்று நீங்கள் எளிதாக முடிப்பீர்கள்.

நீங்கள் திருப்தியான நிலையை உணர்வீர்கள். உங்கள் திறமையை உங்கள் மேலதிகாரிகள் பாராட்டுவார்கள்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியும் நல்லுறவும் காணப்படும். உங்கள் துணையைப் பற்றி நேர் மறையான அன்பான எண்ணம் கொண்டிருப்பீர்கள்.

நிதிநிலைமையில் முன்னேற்றம் காணப்படும். இன்று சீரான நிதி நிலைமை காணப்படும்.

இன்று சிறந்த ஆரோக்கியம் காணப்படும். இன்று ஒழுக்கமான போக்கும் மன உறுதியும் காணப்படும்.




இன்றைய நாளை நன்கு செலுத்த நீங்கள் அமைதியாக இருக்க வேண்டும். நேர்மறை எண்ணங்களை வளர்க்க வேண்டும்.

நீங்கள் பணிகளை திறமையாக ஆற்ற சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க நேரும். கொள்கைகளை பின்பற்றுவதன் மூலம் நன்மை பெறலாம்.

நீங்கள் சிறிய விஷயங்களையும் தீவிரமாக எடுத்துக் கொள்வீர்கள். உங்கள் துணையுடன் நல்லுறவு ஏற்படுத்திக் கொள்வது சிறந்தது.

நிதி நிலைமை இன்று சுமூகமாக இருக்காது. உங்கள் குடும்பத்திற்காக பணம் செலவு செய்வீர்கள்.

மகிழ்ச்சியாக இருப்பதன் மூலம் ஆரோக்கியமாக இருக்கலாம். என்றாலும் பாதுகாப்பின்மை உணர்வு உங்கள் ஆரோக்கியத்தை பாதிக்கும்.




இன்றைய விளைவுகளை எண்ணி வருத்தப்படுவதை விட அமைதியாக இருப்பது சிறந்தது. அதிர்ஷ்டமற்ற நிலையை சமாளிக்க நீங்கள் நம்பிக்கையுடன் இருப்பது சிறந்தது.

பணி சம்பந்தமான பயணம் மகிழ்ச் சிகரமாக இருக்காது. பயணத்தின் போது தேவையற்ற பதட்டம் காணப்படும்.

குடும்ப பிரச்சினை ஒன்றின் காரணமாக நீங்கள் உணர்சிவசப்படுவீர்கள். இதனால் உங்கள் துணையுடனான உறவு பாதிக்கும். இதனை எளிதாக எடுத்துக் கொண்டு அமைதியாக இருக்க வேண்டும்.

இன்று பண இழப்பிற்கான சாத்திய உள்ளது. எனவே பணத்தைக் கையாளும்போது கூடுதல் கவனம் தேவை.




இன்று விழிப்புணர்வை பராமரிக்க வேண்டிய நாள். உங்கள் வீட்டில் சுப நிகழ்சிகள் ஏதாவது இன்று திட்டமிட்டி ருந்தால் அதனை வேறு நாளைக்கு தள்ளிப் போடுவது சிறந்தது.

பணியைப் பொறுத்தவரை இன்று மும்மரமான நாள். சிறந்த செயல் திறனுக்கு நீங்கள் கூடுதல் முயற்சிகள் எடுக்க வேண்டும்.

உங்கள் துணையுடன் மோதல் ஏற்பட வாய்ப்புள்ளது. உறவு சுமூகமாக இருப்பது உங்கள் கையில் தான் உள்ளது.

நிதி வளர்ச்சி ஸ்திரமாக இருக்காது. நீங்கள் பணம் வீணாகாமல் தடுக்க சாதுர்யமாக செலவு செய்ய வேண்டும்.

இன்று ஆரோக்கியப் பிரச்சினை காணப்படும்.




இன்று உங்களுக்கு சாதகமான நாள். உங்கள் பணிகளை எளிதாக மேற்கொள்வீர்கள். உங்கள் முயற்சி மூலம் வெற்றி காண்பீர்கள்.

பணியிடச் சூழல் சிறப்பாக இருக் கும். சாதகமான பலன்களை அளிக் கும். நீங்கள் திருப்தியை உணர்வீர்கள்.

நீங்கள் சகஜமாக இருக்க வேண்டும். அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும். இந்த நேர்மறை போக்கின் காரணமாக உறவில் நல்லிணக்கம் ஏற்படும்.

நிதி வளர்ச்சி இன்று சிறப்பாக இருக்கும். எதிர்பாராத பண வரவு காணப்படும்.

உங்கள் தேக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்கள் உறுதியும் உற்சாகமும் உங்களை ஆரோக் கியமாக வைத்திருக்கும்.




இன்று நேர்மறையான ஒத்துப் போகும் மனநிலை காணப்படும். ஆன்மீக ஈடுபாடு மகிழ்ச்சியை அளிக்கும்.

பணியிடச் சூழலில் பலன்கள் கலந்து காணப்படும். நீங்கள் திறம்பட செயலாற்ற கவனமுடன் பணியாற்ற வேண்டும்.

உங்கள் இருவரிடையே மகிழ்ச்சியை பராமரிக்க நீங்கள் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

இன்று பண வரவு செலவு இரண்டும் இணைந்து காணப்படும். அதற்கேற்றபடி திட்டமிட்டு பணத்தை பயன்படுத்தவும். இன்று முதுகுவலி ஏற்பட வாய்ப்புள்ளது. பதட்டத்தைக் குறைத்து ஆரோக் கியத்தை பராமரியுங்கள்.

# இன்றைய ராசி பலன்கள்- 11.01.2026




எந்த விஷயத்தையும் சகஜமாக எடுத்துக் கொள்ள வேண்டும். இன்று பொறுமையுடனும் அமைதியுடனும் இருக்க வேண்டும்.

பணியிடச் சூழலில் முன்னேற்றம் அவசியம். உங்கள் பணிகளை திறம்பட ஆற்ற உங்கள் அணுகுமுறையை மாற்றிக் கொள்ள வேண்டும்.

உங்கள் துணையிடம் நீங்கள் அதிக சொந்தம் கொண்டாடுவீர்கள். இது உறவின் மகிழ்ச்சியை பாதிக்கும்.

நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்காது. எனவே எதிர் காலத்திற்காக சேமிக்க வேண்டும்.

தொண்டை வலி ஏற்பட வாய்ப்புள்ளது. குளிர்ச்சியான உணவுகளை தவிர்ப்பது நல்லது. காய்ச்சல் ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று மகிழ்ச்சியளிக்கு வகையில் எந்த நிகழ்வும் காணப்படாது. அமைதியாக இருப்பதும் ஆன்மீக ஈடுபாடும் சிறந்தது.

பணியிடத்தில் முன்னேற்றம் குறைந்து காணப்படும். பணிச்சுமை அதிகமாக இருக்கும்.

உங்கள் துணையுடன் பேசும்போது கட்டுப்பாடு இழப்பீர்கள். இதனால் விவாதம் ஏற்படும். இது இருவரிடையே காணப்படும் அன்பை பாதிக்கும்.

நிதி வளர்ச்சி பொறுத்தவரை இன்று சிறப்பான நாளாக இருக்காது. எதிர்கால தேவைக்காக ஒவ்வொரு பணமும் சேமிப்பது சிறந்தது.

கண்களில் சில பிரச்சினைகள் ஏற்படலாம். மருத்துவ பரிசோதனை மேற்கொள்வது சிறந்தது.




இன்று உங்களுக்கு சாதகமான நாள். நீங்கள் அமைதியான சூழ்நிலை காணப்படும். அனுசரனையான மனநிலை காணப்படும்.

பணியிடச் சூழல் திருப்தியை அளிக்கும். நீங்கள் குறைவான முயற்சியில் வெற்றி பெறுவீர்கள்.

உங்கள் அணுகுமுறையில் அர்ப்பணிப்பு காணப்படும். இந்தப் போக்கின் காரணமாக உங்கள் துணையுடன் மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.

உங்கள் குடும்பத்திற்காக பணம் செலவு செய்வீர்கள். இதனால் சேமிப்பது கடினமாக இருக்கும்.

கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது. உடற்பயிற்சி மூலம் ஆரோக்கியத்தை சிறப்பாக பராமரிக்கலாம்.




இன்று வேடிக்கையும் மகிழ்ச்சியும் நிறைந்திருக்கும் நாள். மொத்தத்தில் இன்று மகிழ்ச்சி காணப்படும்.

நீங்கள் உங்கள் பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பீர்கள். தன்னம்பிக்கையுடன் செயல்படுவீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் சமநிலை அணுகுமுறை பராமரிப்பீர்கள். உறவில் நல்லிணக்கம் காணப்படும்.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாகவும் உங்களுக்கு சாதகமாகவும் காணப்படும்.நீங்கள் சிறிது பணத்தை சேமிப்பீர்கள்.

இன்று நேர்மறையான ஆற்றல் உங்களிடம் காணப்படும். இதனால் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

# நாகர்கோவில் இளைஞர்கள் நடத்திய தைத் திருநாள் மரதன் ஓட்டப்போட்டி



யாழ். வடமராட்சிக் கிழக்கு நாகர்கோவில் இளைஞர்கள் தைப்பொங்கல் திருநாளினை முன்னிட்டு நடாத்தும் 15 – 20 கிலோ மீற்றர் வரையிலான மரதன் ஓட்டப் போட்டி நிகழ்ச்சி நேற்று சனிக்கிழமை மாலை 3மணியளவில் ஆரம்பமானது.

மணற்காட்டு சந்தியிலிருந்து ஆரம்பமாகிய மரதனோட்டம் நாகர்கோவில் வடக்கு முருகையா ஆலய வளாக முன்றிலில் முடிவடைந்தது.

இந்தப் போட்டியில் மணற்காடு, நாகர்கோவில் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த ஐம்பதிற்கும் மேற்பட்ட இளைஞர்கள் பங்குபற்றினர்.

குறித்த போட்டியில் குறிப்பிடப்பட்ட தூரத்தை கேதீஸ்வரன் கவீந்திரன் 40நிமிடங்களில் ஓடி முடித்து முதலிடம் பெற்றார். 43 நிமிடங்களில் ஓடி முடித்த ஜெயரஞ்சன் லக்சன் இரண்டாம் இடத்தையும், பாஸ்கரன் ரிஷிகரன் மூன்றாம் இடத்தையும் பெற்றுக்கொண்டனர்.

இதேவேளை, 13வயது மதிக்கத்தக்க சிவலக்ஸ்பன் அபர்ணா மற்றும் 16 வயது மதிக்கத்தக்க சிவலக்ஸ்பன் லக்சிகா ஆகிய சிறுமிகள் போட்டித்தூரத்தை முழுவதுமாக ஓடி நிறைவு செய்திருந்தமை அனைவரது கவனத்தையும் ஈர்த்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.